16th JULY 2024


www.uthayam.lk

# உதயம்

சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

உதயம்: 01 | இதழ்: 39 | பக்கங்கள் - 12 | editor.uthayam@gmail.com




## ஜனாதிபதி பதவிக் காலம் எதிர் மனு தள்ளுபடி



**ஐந்து இலட்சம் செலுத்தவும் உத்தரவு**

ஜனாதிபதி தேர்தலை இடைநிறுத்தக் கோரி தாக்கல்

02ம் பக்கம்பார்க்க...



# இரண்டு தினங்களில் மாறப் போகும் அரசியல் களம்

### புதன் முதல் தேர்தல் ஆணைக்குழுவுக்கு அதிகாரம்

ஜனாதிபதி தேர்தலை நடாத்துவதற்கான தடைகள் அனைத்தும் நீங்கியுள்ளதால் இந்த வாரம் அரசியல் களம் சூடு பிடிக்கும் என விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர் .கட்சித் தாவல்கள் பெருமளவு இடம்பெறுமென எதிர்பார்கப்படுவதால் அரசியல் கள நிலவரங்களை அறிந்து கொள்வதில் மக்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாச,அனுர

02ம் பக்கம்பார்க்க...



## திருத்தப்பட்ட புதிய மின் கட்டண பட்டியல்

மின் கட்டணத்தை 22.5 வீதமாகக் குறைப்பதற்கு பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

02ம் பக்கம்பார்க்க...

## காஸாவில் கொல்லப்பட்டோர் ஒரு இலட்சத்து 87,000 பேர்

### பிரித்தானிய சஞ்சிகை அதிர்ச்சி தகவல்!

காஸாவில் தொடர்ந்து நடைபெற்று வரும் யுத்தம் காரணமாக கொல்லப்பட்டோரின் எண்ணிக்கை ஒரு இலட்சத்து எண்பதாயிரத்துக்கும் அதிகம் என பிரித்தானிய வைத்திய சஞ்சிகை ஒன்று

02ம் பக்கம்பார்க்க...

## ஹாபிஸான இரு சிறுவர்களை பாராட்டிய சவூதி தூதுவர்



இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இருந்து, புனித குர்ஆனை மனனம் செய்து முடித்த சிறுவர்களான மொஹமட் பஸ்லான் மொஹமட் பைரூஸ் மற்றும் மொஹமட் ஷரஃப் மொஹமட் ஹில்மி ஆகியோரை, இலங்கைக்கான சவூதி

02ம் பக்கம்பார்க்க...

# மொட்டுவின் வேட்பாளர் தம்மிக்க பெரேரா

### ரணிலுக்கு அதிர்ச்சி



எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜன பெரமுன வேட்பாளராக பிரபல வர்த்தகர் தம்மிக பெரேரா களமிறக்கப்படவுள்ளதாக ரஷ்யாவுக்கான முன்னாள் இலங்கைத் தூதுவரும் ராஜபக்ஷ க்களின் நெருங்கிய உறவினருமான உதயங்க வீரதுங்க தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி தேர்தல் வேட்பாளர் எதிர்வரும் 25 ஆம் திகதி பிரகடனப்படுத்தப்படவுள்ளதாகவும் அன்றைய தினம் தம்மிக பெரேராவுக்கு வரவேற்பு வழங்குவதற்கு நாடு முழுவதும் ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை வேட்பாளராக களமிறக்குவதற்கு மஹிந்த குடும்பத்தின் பெரும்பாலானோர் விரும்புகின்ற போதிலும் பசில் ராஜபக்ஷ,நாமல் ராஜபக்ஷ ஆகியோர் இதற்கு விருப்பம் தெரிவிக்கவில்லை. ரணில் விக்கிரமசிங்கவுடன் இறுதியாக நடாத்திய பேச்சுவார்த்தையும் தோல்வியில் முடிந்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

## ஐ.ம.சக்தியின் தவிசாளராக கபீர் ஹாசீம்



ஐக்கிய மக்கள் சக்தியின் புதிய தவிசாளராக கேகாலை மாவட்ட

02ம் பக்கம்பார்க்க...





உங்கள் வாகனத்துக்குரிய சாவியை
மிகவும் குறைவான மாதாந்த தவணைக்கொடுப்பனவுகளில் பெற்றுக்கொள்ளுங்கள்

ரூ. 2,085/-
ரூ.100,000க்கு வாடகை*

- மிகக்குறைந்த மாதாந்த தவணைக்கட்டணம்
- 7 ஆண்டுகள் வரையான மீள்செலுத்தும் காலம்
- 24 மணித்தியாலத்திற்குள் அங்கீகாரம்

விண்ணப்பிக்க ஸ்கேன் செய்யவும்

அழையுங்கள் 011 7 756 756 | www.amanabank.lk

இது உங்கள் வங்கி Amāna Bank

## இரண்டு...

**(முன் பக்கத் தொடர்ச்சி)**

குமார திஸாநாயக்க உட்பட கட்சித் தலைவர்கள் இறுதிக் கட்ட கள நிலவரங்களை தயார்படுத்தி வருகின்றனர்.

ஜனாதிபதித் தேர்தலை நடத்தும் முழுமையான அதிகாரம் இன்னும் 48 மணிநேரத்தில் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு கிடைக்க உள்ளது.

தேர்தலை நடத்துவதற்கான நீதிமன்றத் தடைகள் அனைத்தும் நீங்கியுள்ளதால் நிச்சயமாக தேர்தல் நடைபெறும் சூழ்நிலை உருவாகியுள்ளது.

தேர்தலை பிற்போடுவதற்காக பல தரப்பினரும் முயற்சிகளை மேற்கொண்டனர். கடந்த நான்கு வாரங்களில் இரண்டு மனுக்கல் ஜனாதிபதித் தேர்தலை பிற்போடும் உத்தரவை பிறப்பிக்குமாறு உயர்நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டன.

ஆனால், 19ஆவது திருத்தச்சட்டத்தின் பிரகாரம் ஜனாதிபதியின் பதவிக்காலம் 5 வருடங்கள் என தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளதாக உயர் நீதிமன்றம் குறித்த மனுதாரர்களின் மனுக்களை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளாமலேயே நிராகரித்துவிட்டது.

இதனால் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க ஆகியோர் தேர்தல் பிரசாரத்தை தீவிரமாக முன்னெடுக்க திட்டமிட்டுள்ளனர்.

இந்தவாரம் முழுவதும் பொதுஜன பெரமுன, ஐக்கிய தேசியக் கட்சி உட்பட தமக்கு ஆதரவான தரப்பினருடன் பல்வேறு முக்கியத்துவம் வாய்ந்த சந்திப்புகளை ரணில் விக்ரமசிங்க நடத்த திட்டமிட்டுள்ளதாக தெரியவருகிறது.

இலங்கை அரசியலில் எதிர்வரும் இரண்டு வாரங்கள் தீர்மானமிக்க வாரங்களாக அமையும் என அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

## ஜனாதிபதி...

**(முன் பக்கத் தொடர்ச்சி)**

செய்யப்பட்ட மனுவை நேற்று காலை முதல் விசாரித்த உயர்நீதிமன்றம், மனுவை தள்ளுபடி செய்தது.

19 ஆவது அரசியலமைப்பு திருத்தம் உரிய வகையில் நிறைவேற்றப்படாததால் அதனை பொதுமக்கள் கருத்து கணிப்புக்குட்படுத்தி நிறைவேற்றும் வரை ஜனாதிபதித் தேர்தலை நடத்துவது அரசியலமைப்பிற்கு முரணானது என தீர்ப்பு வழங்குமாறு கோரி உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனு தாக்கல் செய்யப்பட்டது.

சட்டத்தரணி அருண லக்சிறி உனவட்டுன இந்த மனுவை தாக்கல் செய்தார்.மனுவின் பிரதிவாதிகளாக தேர்தல்கள் ஆணைக்குழு மற்றும் அதன் உறுப்பினர்கள், பாராளுமன்ற செயலாளர் நாயகம், சட்ட மாஅதிபர் ஆகியோர் பெயரிடப்பட்டிருந்தனர்.






## காஸாவில்...

**(முன் பக்கத் தொடர்ச்சி)**

தெரிவிக்கின்றது. பிரித்தானிய வைத்திய சஞ்சிகையான லென்செட் நடாத்திய ஆய்விலேயே இந்த தகவல்கள் வெளியாகியுள்ளன. 37,000 பேர் கொல்லப்பட்டிருப்பதாக உத்தியோகபூர்வ தகவல்கள் வெளிவந்திருந்த போதும் லென்செட் சஞ்சிகையின் படி 1,86,000 க்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

லென்செட் என்பது பிரித்தானியாவில் இருந்து வெளிவரும் உலகின் மிக பிரபலமான வைத்திய சஞ்சிகையாகும். காஸாவில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கையை மதிப்பிடுவதில் பெரும் சிரமங்கள் எதிர்கொள்ளப்படுகின்றன.

யுத்தத்தில் நேரடியாக என இல்லாவிட்டாலும் மறைமுகமாக பெருந்தொகையானோர் கொல்லப்பட்டிருப்பதாக குறிப்பிடப்படுகிறது. அதாவது உத்தியோப்பூர்வ புள்ளிவிவரங்களை விட 15 சதவீதத்திற்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டிருக்கலாம் என அச் சஞ்சிகை தகவல் வெளியிட்டுள்ளது.

37,396 பேர் கொல்லப்பட்டதாக உத்தியோகபூர்வ அறிக்கைகளில் தெரிவிக்கப்பட்ட போதும் இதனை விட நான்கு மடங்கு அதிகமானோர் கொல்லப்பட்டிருப்பதாக இந்த லென்செட் சஞ்சிகை தெரிவிக்கின்றது. இஸ்ரேலியர்கள் எவ்வளவு பேர் கொல்லப்பட்டார்கள் என்பது கணிக்க முடியாதிருப்பதாகவும் இவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. அனேகமான சடலங்கள் இடிபாடுகளுக்கு அடியில் சிக்குண்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேலிய படையினர் தொடர்ந்து தாக்குதல்கள் மற்றும் விமான தாக்குதல்களை நடாத்தி வருவதன் காரணமாக கட்டட இடிபாடுகளுக்குள்ளேயும் வைத்தியசாலைகளுக்குள்ளேயும் இருக்கின்றவர்கள் பற்றிய விபரங்களை பெறுவதில் கடினமான சூழ்நிலை நிலவுவதாகவும், உண்மையாக இந்த யுத்தத்தினால் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை அறியப்பட்டதை விட கூடுதலாக இருக்குமென்றும் அமெரிக்க இஸ்லாமிய தொடர்பாடல் பணிப்பாளர் நிஹாட் அவாட் தெரிவித்துள்ளார்.

இவை இஸ்ரேலின் இனச் சுத்திகரிப்புக்கு எதிராக வழக்கு தொடர்வதற்கு போதிய சான்றுகளாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்த பயங்கரமான மனித அழிவை தொடர்வதற்கான ஆயுதங்களை பைடன் அரசாங்கம் இஸ்ரேலுக்கு தொடர்ந்து வழங்கி வருவதாக கெயா நிறுவனத்தின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

## ஹாபிஸான...

**(முன் பக்கத் தொடர்ச்சி)**

அரேபியத் தூதர் காலித் பின் ஹமூத் அல்கஹ்தானி சந்தித்து, வாழ்த்துக்கூறி அவர்களுக்கு அன்பளிப்புகளையும் வழங்கி, வெற்றிபெற வாழ்த்தியுள்ளார்.

## ஐ.ம...

**(முன் பக்கத் தொடர்ச்சி)**

பாராளுமன்ற உறுப்பினர் கபிர் ஹாசிம் நியமிக்கப்படவுள்ளார். தற்போது ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவராக இருக்கும் ஜெனரல் சரத் பொன்சேகா அப்பதவியிலிருந்து நீக்கப்பட்ட பின்னர் ஏற்படும் வெற்றிடத்திற்கே கபிர் ஹாசிம் நியமிக்கப்படவுள்ளார். கபிர் ஹாசிம் இதற்கு முன்பும் ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளராக பணிபுரிந்தமை குறிப்பிடத்தக்கது.

## திருத்தப்பட்ட..

**(முன் பக்கத் தொடர்ச்சி)**

இதனடிப்படையில் திருத்தப்பட்ட புதிய மின் கட்டணம் நாளை(16) முதல் அமுலுக்கு வரவுள்ளதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தலைவர் பேராசிரியர் மஞ்சுள பெர்ணான்டோ தெரிவித்தார்.




# தேர்தல் தினம் அறிவிக்கப்பட்டதும் இறுதி முடிவை அறிவிப்போம்

## மு.க தலைவர் ஹக்கீம் திருச்சியில் தெரிவிப்பு



(திருச்சி சாஹுல் ஹமீத்)

இலங்கையில் ஜனாதிபதி தேர்தலுக்கான அறிவிப்பு இன்னும் சில தினங்களில் வெளியாகுமென எதிர்பார்க்கப்படுவதால் எந்த கூட்டுக்கு ஆதரவு என்பது குறித்து அதன் பின்பு கூடி இறுதியான தீர்மானத்தை எடுப்போம்.

தஞ்சாவூர் தனியார் கல்லூரியொன்றின் பட்டமளிப்பு விழாவில் பங்கேற்பதற்காக இந்தியா சென்ற போது திருச்சி விமான நிலையத்தில் ஊடகங்களிடம் கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எங்களது கட்சி தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கட்சிக்கு எதிரான நிலைப்பாட்டிலேயே உள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.


# மணமகள் தேவை

அமெரிக்க பிரஜாவுரிமையுடன், அமெரிக்காவில் தொழில்புரிந்து வசித்துவரும் திஹாரிய பிரதேசத்தைச் சேர்ந்த 49 வயதுடைய விவாகரத்து பெற்ற, பிள்ளைகளற்ற ஒருவருக்கு முஸ்லிம் மணமகள் (பிள்ளைகளற்ற) ஒருவர் தேவை. இலங்கை வந்து திருமணம் செய்துவிட்டு மணமகளை அமெரிக்காவிற்கு அழைத்துச் செல்லவுள்ளார்.

மேலதிக தகவல்களுக்கு: 070 239 7210 எனும் வட்ஸ்அப் இலக்கத்தினூடாக தொடர்புகொள்ளவும்.


# எதிர்க்கட்சித் தலைவருக்கும் தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவருக்கும் இடையே விசேட கலந்துரையாடல்!



பிரபஞ்சம் ஸ்மார்ட் வகுப்பறைகளை திறந்து வைக்கும் முகமாக மன்னார் மாவட்டத்திற்கு இன்றைய தினம் (15) விஜயம் மேற்கொண்டுள்ள எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாச, தமிழீழ விடுதலை இயக்கத்தின் (டெலோ) தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் அவர்களை மன்னார் கொன்வென்ட் வீதி, பெற்றாவில் அமைந்துள்ள தலைமை அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.







www.uthayam.lk
# உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்
2024 JULY 16 - TUESDAY
WEB: www.uthayam.lk
E-mail: editor.uthayam@gmail.com
FB ID: உதயம்

## பரீட்சை திணைக்கள குளறுபடிகள் தொடருவதற்கு இடமளிக்கக் கூடாது

அண்மைக்காலமாக அரசாங்க பரீட்சைக்கு தோற்றும் முஸ்லிம் மாணவிகளின் பெறுபேறுகளை வெளியிடுவதில் காட்டப்படும் பாரபட்சம் முஸ்லிம் மாணவிகளின் கல்வி வளர்ச்சிக்கு தடையாக அமைந்துள்ளது.

திருகோணமலை ஷாஹிறா கல்லூரி மாணவிகளின் கா.பொ.த உயர்தரப் பரீட்சை முடிவுகளை இடைநிறுத்திய விவகாரம் முஸ்லிம் சமூக தலைமைகளின் பலத்த வற்புறுத்தலுக்கு பிறகு தீர்க்கப்பட்ட மறுகணமே 13 முஸ்லிம் பெண் அதிபர்கள் தோற்றிய தலைகால் பரீட்சை முடிவுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. பரீட்சை திணைக்களத்தின் இந்த செயற்பாடுகளுக்கு சில இனவாத பரீட்சை மேற்பார்வையாளர்களே காரணம் என தெரிய வந்துள்ளது. பருவ வயதை அடைந்த முஸ்லிம் பெண்களுக்கு தமது தலைகளை மறைத்து ஹிஜாப் அணிவது இஸ்லாம் விதித்துள்ள கட்டாய விழுமியமாகும். இது தொடர்பாக பரீட்சைத் திணைக்களம் தெளிவான சுற்றுநிருபம் ஒன்றை வெளியிட்டுள்ளது. பரீட்சை மண்டபத்துக்கு நுழைய முன் தமது காதுகளை திறந்து காட்டக்கூடிய வகையில் தலையை மறைக்க வேண்டும் என அச்சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனை அமுல்படுத்துவது பரீட்சை மேற்பார்வையாளர்களின் கடமையாகும். அப்படியிருக்க பரீட்சை மேற்பார்வையாளர்கள் சிலர்தமதுகுறிப்புகளில்ஹிஜாப்அணிந்திருந்தமைதொடர்பாக பாதகமான கருத்துக்களை பதிவு செய்துள்ளதனாலேயே பரீட்சை பெறுபேறுகள் இடைநிறுத்தப்பட்டு வருகின்றன.

அண்மையில் பாராளுமன்றத்தில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் ரிஷாட் பதியுதீன் 13 அதிபர்களது பெறுபேறுகள் இடைநிறுத்தப்பட்டது தொடர்பாக கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த வின் கவனத்துக்கு கொண்டு வந்ததையடுத்து ஒரு வாரத்துக்குள் பரீட்சை முடிவுகளை வெளியிடுவதாக கல்வியமைச்சர் உறுதியளித்துள்ளார். அமைச்சரின் இந்த அறிவிப்பு பாதிக்கப்பட்டவர்களுக்கு மட்டுமன்றி முஸ்லிம் சமூகத்துக்கும் ஆறுதலை அளிப்பதாக உள்ளது. ஒரு சமூகத்தின் மத உரிமைக்கு மதிப்பளிக்க வேண்டியதும், கல்வி அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களுக்கு மதிப்பளிக்க வேண்டியதும் அரசாங்கத்தின் கடமையாகும். கல்வித் திணைக்களம் மற்றும் பரீட்சைத்திணைக்களம்ஆகியவற்றில் இடம்பெறும் இவ்வாறான குளறுபடியான நடைமுறைகளுக்கு சில அதிகாரிகளே காரணமென பாராளுமன்றத்தில் முன்னாள் அமைச்சரும், முன்னாள் எம்பியுமான ரிஷாட் பதியுதீன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

மேலும், அவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த இனமத பேதமின்றி செயற்படும் ஒருவர் என்றும் இனமத பேதமின்றி சகல மக்களையும் நடத்துபவர் என்றும் பாராட்டியுள்ளார். ஒருசில அதிகாரிகளின் இவ்வாறான செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதற்கும், இதுபோன்ற பிரச்சினைகள் வராமல் தடுப்பதற்கும் தெளிவான சட்டம் ஒன்றை பரீட்சைத் திணைக்களம் வெளியிட வேண்டும். பார்க்கும்பார்வையில்இதுஒருசிறுபிரச்சனையாகஇருந்தாலும். படிக்கும் இளம் மனங்களில் இப்பிரச்சினை பாரதூரமாக பதிவாகுவதை தவிர்க்க முடியாது. பாராளுமன்றத்தில் உள்ள முஸ்லிம் உறுப்பினர்கள் ஒன்றுசேர்ந்து கல்வியமைச்சின் ஆலோசனைக் குழுவுக்கு இப்பிரச்சினையை தெளிவுபடுத்தி, இதுதொடர்பான தெளிவான சுற்றுநிருபம் ஒன்று வெளியிட்டு இப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண முன்வர வேண்டும்.

# வஹாப் வாதத்தினால் சம்பிரதாய முஸ்லிம்களுக்குப் பாதிப்பு!

### - உலமா சபை என்னிடம் கூறியது -

## பாராளுமன்றில் போட்டுடைத்த விஜேதாஸ ராஜபக்ஷ!



வஹாப் வாதத்தை தடுத்து நிறுத்துங்கள் என்று ஜம்இய்யதுல் உலமா சபை என்னிடம் கூறியது என இலங்கை நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ குறிப்பிட்டார்.

பாராளுமன்றில் உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில்,

2016 ஆண்டு நான் நீதி அமைச்சராக இருந்த போது அகில இலங்கை ஜம்மியதுல் உலமா உறுப்பினர்கள் என்னை சந்தித்தார்கள்.

அஸாத் சாலியும் அவர்களோடு வந்தார். அவர்கள் வாஹாப்வாத அடிப்படைவாத புத்தகங்களை எடுத்து வந்திருந்தனர்.

அந்த புத்தகங்களில் உள்ள விடயங்கள் வெளிநாடுகளில் இருந்து வந்த கொள்கைகள் என அவர்கள் கூறினர். இதனால் இலங்கையில் வாழும் சம்பிரதாய முஸ்லிம்களுக்கு பாதிப்பு என அவர்கள் சுட்டிக்காட்டினர்.

இந்த விடயத்தை நான் பாதுகாப்பு தரப்பிற்க்கு சுட்டிக்காட்டியும் பயன் கிடைக்கவில்லை. இதை பேசப்போய் என்னை இனவாதியாக்கி அமைச்சு பதவியில் இருந்து விரட்டிவிட்டார்கள் என அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ குறிப்பிட்டார்.

# தனக்கு வாக்களிக்காத முஸ்லிம்களைத் தண்டிக்க, கோத்தாபய அரசு எடுத்த நடவடிக்கை தான் ஜனாஸா எரிப்பு!

### - பைசர் முஸ்தபா ஆவேசம் -



(ஐ.ஏ. காதிர் கான்)

ஜனாதிபதித் தேர்தலின் போது தனக்கு ஓட்டுப்போடாத ஒரேயொரு காரணத்தினால் தான், கோத்தாபய முஸ்லிம்களைத் தண்டித்தார். இவ்வாறு முஸ்லிம்களைத் தண்டிக்க, கோத்தாபய அரசு எடுத்த மிக மோசமான செயல்தான் ஜனாஸா எரிப்பு என, முன்னாள் அமைச்சரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான பைஸர் முஸ்தபா குற்றம் சுமத்திப் பேசினார்.

ஜனாஸா தகனம் பற்றிய ஆவணப் படம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே பைஸர் முஸ்தபா மேற்கண்டவாறு கூறினார்.

பைஸர் முஸ்தபா தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கும்போது,

“முஸ்லிம்கள் படும் துன்பங்களை விவரிக்கும் ஆவணப்படத்தில், அதன் தயாரிப்பாளர்கள் எடுத்துள்ள முயற்சிகளைப் பாராட்டாமல் இருக்க முடியாது. அதே வேளையில், இந்தப் பிரச்சினை உண்மையில் ஆட்சியில் இருந்த இனவாத ஆட்சியின் விளைவு என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன் .

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ வும் அவரது ஆட்சியாளர்களும் அவர்களுக்கு வாக்களிக்காததால், முஸ்லிம்கள், தமிழர்கள் மற்றும் பிற சிறு பான்மையினர்களைத் தண்டிப்பது பொருத்தமானது என்று நினைத்தனர்.

இந்த இனவாத, மத வெறி மற்றும் மனிதாபிமானமற்ற பார்வையின் விளைவாகத்தான், மரணித்த முஸ்லிம்களது ஜனாஸாக்களை எரித்து தகனம் செய்யும் நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டனர் .

அன்றைய அரசாங்கத்தில் இருந்த அரசியல்வாதிகளும், இந்த முடிவுகள் எந்த பகுத்தறிவுக் காரணத்தினாலும் எடுக்கப்பட்டவைகள் அல்ல என்பதை நன்கு தெரிந்தும், கைகெட்டி சும்மா பார்த்துக் கொண்டிருந்தனர்.

எனவே, பெரும்பான்மையினராக இருந்தாலும் சிறு பான்மையினராக இருந்தாலும், எந்த ஒரு சமூகத்திற்கும் இவ்வாறு நடக்காமல் இருப்பதை நாம் உறுதி செய்ய வேண்டும். அத்துடன், இதனைத் தடுக்கவும் நாம் முயற்சிக்க வேண்டும். இவ்வாறான விடயங்களையும் நாம் ஆவணப் படத்தில் சித்தரிக்க வேண்டும்” என்றார்.



# காலநிலை மாற்றத்தின் மூலம் இழக்கப்படும் நாட்டின் மொத்த உற்பத்திக்கான பங்களிப்பினை தக்க வைக்க வேண்டும்

(எஸ்.ஆர்.எம்.எம்.இர்ஷாத்)

இயற்கையானது மனித தேவைகளுக்காக படைக்கப்பட்டதொன்று என்பதை மனிதர்கள் புரியாமல் செயலாற்றுகின்ற போதே இயற்கை சீற்றங்கள் ஏற்படுகின்றன என்ற உண்மையினை இன்னும் பலர் புரியாமல் செற்படுவதை அவதானிக்க முடிகின்றது.

இற்றைக்கு பல வருடங்களுக்கு முன்பதாக இயற்கையுடன் கூடிய கால நிலையினை பின்னோக்கி பார்ப்போமெனில் அது அருளாகவே இருந்திருக்கின்றது.

இவ்வாறானதொரு சூழலில் நாம் பார்க்கின்ற கால நிலையான வெயில்,மழை என்பன மனித தேவைகளுக்கு போன்று பயிர் பச்சைகளின் உற்பத்திக்கும் இன்றியமையாததொன்றாகவே அமைந்திருந்தது.

மனிதர்களின் முறையற்ற செயற்பாடுகளானது இயற்கையின் மாற்றத்திற்கு பிரதானதொரு வழிகோலாக மாறியுள்ளதை தற்போதைய பல்வேறு கால நிலை மாற்றங்கள் சுட்டிக்காண்பிக்கின்றது. இதில் இருந்து மக்களையும்,மனித பயன்பாட்டுக்கான உற்பத்திகளையும் பாதுகாப்பது மிகவும் அத்தியவசியமான கடமையாக மாறியுள்ளது.



குறிப்பாக புத்தளம் மாவட்டத்தை பொறுத்தவரையில் எல்லைப் புர கிராமமான கல்பிட்டி பிரதேசம் இவ்வாரான இயற்கை அழிவுகளை அடிக்கடி சந்தித்து வருவதால் விவசாயம், கடற்றொழில்,மற்றும் சுயதொழில் முயற்சி துறைகள் என்பன மிகவும் பின்னடைவினை சந்தித்துள்ளது.இதனால் மக்களின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாக மாறிவிட்டதை இங்கு பதிவிடுவது பொருத்தமாகும்.

கால நிலை மாற்றம் தொடர்பில் மக்களை தெளிவூட்டுவது இன்றியமையாததொன்றாக இருப்பதை அவதானித்த கொழும்பு பல்கலைக்கழகத்தின் கற்கைப் பிரிவானது கால நிலை மாற்றம் காரணமாக சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளுக்கு ஏற்படும் தாக்கங்கள் மற்றும் அவற்றை குறைப்பதற்கான உபாயங்கள் மற்றும் அது தொடர்பான நிதி வசதிகள் பற்றிய பயிற்ச்சிப்பட்டறை ஒன்றினை கல்பிட்டி பிரதேச செயலகப் பிரிவில் இரு பிரிவுகளாக நடத்தியது.

கல்பிட்டி பிரதேச செயலகத்திலும்,நாவற்காடு மண்டபத்திலும் இந்த செயலமர்வுகள் கடந்த 13 ஆம் (13.07.2024) இடம் பெற்றது.குறிப்பாக இந்த செயலமர்வில் சிறிய மற்றும் நடுத்தர தொழிற் முயுற்சியாளர்களான பெண்கள் பங்கெடுத்தமை முக்கியமானதாகும்.

இவ்வாறான தொழில் முயற்சியாளர்களை மேலும் ஊக்குவிக்கும் பல திட்டங்களை இலங்கைக்குள் நடைமுறைப்படுத்திவரும் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி திட்டம் இதனை ஆராய்ந்து உரிய பரிந்துரைகளை செய்ய கொழும்பு பல்கலைக்கழத்திற்கு பாரப்படுத்தியமையானது மிகவும் சிறப்பானதொரு முன்னெடுப்பாகும்.

இரு அமர்வுகளாக இடம் பெற்ற மேற்படி செயலமர்வில் பங்கெடுத்த பெண் தொழில் முயற்சியாளர்கள் தங்களது அனுபவங்களை குழு கலந்துரையாடல் மூலம் முன் வைத்ததில் இருந்து எடுகோல் சிலவற்றை இங்கு பார்ப்பது பொருத்தமாகும்.

வளம் கொழிக்கும் விவசாய பூமியான கல்பிட்டி பிரதேசம் அண்மைக்கால முறையற்ற கால நிலையினை சந்தித்து வருகின்ற இம்முயற்சியாளர்கள் முன் வைத்த முக்கிய கருவாகும்.

இதில், மீன்பிடி,விவசாயம்,கைத்தொழில்,கால் நடை என்கின்ற தலைப்புக்களில் தமது தொழில் துறைகள் எதிர் நோக்கும் சவால்களுக்கு எவ்வாறு முகம் கொடுப்பது என்ற கேள்வியினை முன் வைத்தனர்.

இதனை தவிர்ப்பதற்கு கால நிலை மாற்றம் என்கின்ற புதியதொரு தலைப்பை அவர்கள் கற்றுக் கொள்வதின் மூலம் இந்த பாதிப்புக்களுக்கு கட்டுப்பாட்டினை ஏற்படுத்த முடியும் என்கின்ற விடயத்தை இந்த செயலமர்வின் மூலம் அறிந்து கொள்ளும் சந்தர்ப்பம் கிட்டியமை இதனது முதற் படியாகும்.

இலங்கையின் பொருளாதாரத்தில் மொத்த தேசிய உற்பத்திக்கு விவசாயம் எவ்வாறு முக்கியப் பங்களிப்பினை வழங்கின்றதோ,இதற்கு சமாந்தரமாக சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களின் பங்கு எவ்விதத்திலும் குறைந்தவையல்ல என்பதை இங்கு சுட்டிக்காட்டுவது பொருத்தமாகும்.இது 52 சதவீதமாகும்.

விவசாயம்,கால்நடை,கடற்றொழில் என்ற பிரிவுகளில் முயற்சியாளர்கள் எதிர் கொள்ளும் கால நிலை மாற்றத்தின் ஊடான இழப்புக்களை கலந்துரையாடல்களுக்கு உட்படுத்தி இதனை தடுக்க அவர்கள் எடுக்க வேண்டிய எதிர் செயற்பாடுகள் அறிவு சார்ந்த ரீதியில் அமையப் பெறல் என்ற விடயம் பிரதான அம்சமாக விவரிக்கப்பட்டது.

கொவிட் தொற்றினால் வலுவிழந்து போன துறைகளில் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளின் இழப்புக்கள் நாட்டின் பங்களிப்புக்கு பாதகமாக இருந்தன.இதே போன்று தற்போதை புதிய வடிவில் உருவாகியிருக்கின்ற கால நிலை மாற்றமானது இத்துறைகளை மேலும் முடக்கும் அளவுக்கு பயணிக்கின்றது என்ற செய்தி தற்போது எங்கும் பேசப்படுகின்றது.

எனவே இந்த சந்தர்ப்பத்தில் அறிவு சார்ந்த தெளிவின் மூலம் தொழில் முயற்சியாளர்களை அறிவூட்டுவது தான் இந்த செயலமர்வின் அடிப்படை நோக்கமாக இருந்துள்ளமை புலனாகின்றது.

## அல்குர்ஆன் உங்கள் இதயத்துடன் பேசுகிறது....

(இப்னு தௌபீக் ஆலீம்)

### துன்பம் தொடருமான தர்மம்

இவர்கள் தங்களுடைய பொருட்களை அல்லாஹ்வுடைய பாதையில் செலவுசெய்து (அப்பொருளை வாங்கியவனுக்கு) தாங்கள் அதை கொடுத்ததற்காக இகழ்ச்சியையும் துன்பத்தையும் (அதனோடு) சேர்க்கவில்லையோ அவர்களுக்குரிய கடலி அவர்களின் "ரப் " பிடம் அவர்களுக்குண்டு.மேலும் அவர்களுக்கு யாதொரு பயமும் இல்லை. அவர்கள் துக்கப்படவும் மாட்டார்கள்.

(தருமம் செய்து) அதை வாங்கியவனுக்கு துன்பம் தொடரும்படியாக செய்யும் தர்மத்தை விட (அன்புடன் கூறும்) இன்சொல்லும் மன்னிப்பும் மிக மேலாகும் அன்றி அல்லாஹ் தேவையற்றவனாகவும் பொறுமையாளனாகவும் இருக்கின்றான். (2:263)

### பலனை பாழாக்கி விடும் செயல்

நம்பிக்கையார்களே ! அல்லாஹ்வையும் மறுமை நாளையும் நம்பாமல் மக்கள் காண்பதற்காக தன பொருளை செலவு செய்து (வீணாக்கு)பவனை போல நீங்கள் (மனமுவந்து வழங்கும்) உங்கள் தருமங்களை (பெற்றவனுக்கு முன்னும் பின்னும்) சொல்லிக் காண்பித்தாலும் துன்புறுத்துவதாலும் (அதன் பலனை) பாழாக்கி விடாதீர்கள் .இத்தகையவனின் உதாரணம் ஒரு வழுக்கைப்பாறையை ஒத்திருக்கிறது. அதன் மீது மண் படிந்தது. எனினும் ஒரு பெரும் மழை பொழிந்து அதை (க் கழுவி) பெரும் பாறையாக்கி விட்டது.

(இவ்வாறே அவன் செய்த தானத்தை அவனுடைய பெருமை அழித்து விடும்) ஆகவே அவர்கள் (தானம்) செய்ததில் இருந்து யாதொரு பலனையும் (மறுமையில்) அடைய மாட்டார்கள்.மேலும் அல்லாஹ் தன்னை நிராகரிக்கும் கூட்டத்திற்கு (அவர்களின் தீய செயல்களின் காரணமாக நேரான வழியில் செலுத்த மாட்டான். 2:264

### தர்மத்திற்கு உதாரணம்

எவர்கள் தங்களுடைய பொருளை அல்லாஹ்வுடைய திருப்பொருத்தத்தை நாடியும் தங்களுடைய உள்ளங்களில் (இறை நம்பிக்கையை) உறுதிப்படுத்துவதற்காகவும் செலவு செய்கிறார்களோ அவர்களுடைய (தர்மத்திற்கு) உதாரணம் உயர்ந்த பூமியாகிய மலைமீதுள்ள ஒரு தோட்டத்தை ஒத்திருக்கின்றது.

அதில் ஒரு பெரும் மழை பெய்தால் இரு மடங்கு பலனை தருகின்றது.பெரும் மழை பெய்யாவிட்டாலும் சிறு தூறல் அதற்கு போதுமானது அன்றி அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை உற்று நோக்கினவனாக இருக்கின்றான். 2 : 265

### ஆராய்ந்து நல்லுணர்ச்சி பெற

உங்களை யார் தான் (இதனை) விரும்புவார்.ஒருத்தருக்கு பேரீட்சை மற்றும் திராட்சையின் ஒரு தோப்பு இருக்கின்றது.அதில் நீரருவிகள் தொடர்ந்து ஓடிக்கொண்டிருக்கின்றன.தொடர்ந்து அதிலிருந்து எல்லா வகை இனி வர்க்கங்களும் அவருக்கு கிடைத்துக் கொண்டிருக்கின்றன.முதுமை அவரை அடைந்தது.(சம்பாதிக்க) இயலாத பல சிறு குழந்தைகளும் அவருக்கு இருக்கின்றனர். (இந்த நிலைமையில்) நெருப்புடன் கூடிய புயல் காற்று அடித்து அதனை எரித்து விட்டது (இத்தகைய நிலைமையை எவர் தான் விரும்புவார்.) நீங்கள் ஆராய்ந்து நல்லுணர்ச்சி பெறுவதற்காக அல்லாஹ் தன்னுடைய வசனங்களை உங்களுக்கு இவ்வாறு (உதாரணங்களை கொண்டு) தெளிவுபடுத்துகின்றன. 2: 266



# பலஸ்தீன் பிரச்சினையில் அக்கறை காட்டும் பிரிட்டன் பிரதமர்!







எஸ்.ஏ. சுஃப்யான்
(Senior Journalist, Chennai - Tamilnadu, India)


பிரிட்டன் நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் கடந்த வெள்ளிக்கிழமை வெளியாகின. 14 ஆண்டுகளுக்குப் பிறகு தொழிலாளர் கட்சி அங்கு ஆட்சியைப் பிடித்திருக்கிறது. இதையடுத்து, பிரிட்டனின் புதிய பிரதமராக தொழிலாளர் கட்சித் தலைவர் கியர் ஸ்டாமர் பதவியேற்றுள்ளார். நாட்டின் புதிய துணைப் பிரதமராக ஏஞ்சலா ரெய்னர் பதவியேற்றுள்ளார்.

பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் 650 இடங்கள் உள்ளன. அதில் தொழிலாளர் கட்சி 412 இடங்களை வென்றுள்ளது, இது பெரும்பான்மைக்கு தேவையான 326 இடங்களைவிட அதிகம்.

அதேநேரம் தேர்தல் முடிவுகளால் ஆட்சியில் இருக்கும் கன்சர்வேட்டிவ் கட்சி லேபர் கட்சி அருதிப் பெரும்பான்மை வெற்றியை பெற்றுள்ளது. இதையடுத்து, அக்கட்சியின் தலைவர் கீர் ஸ்டார்மர் பிரிட்டன் பிரதமராக பதவியேற்க உள்ளார்.

இந்நிலையில், தேர்தல் வெற்றியை அடுத்து லண்டனில் ஆயிரக்கணக்கான ஆதரவாளர்கள் மத்தியில் வெற்றி உரையாற்றிய கீர் ஸ்டார்மர், "தேர்தல் வெற்றியின் மூலம் 14 ஆண்டுகளுக்குப் பிறகு நாடு அதன் எதிர்காலத்தைப் பெறுகிறது. மக்கள் மத்தியில் ஒரு நிம்மதி ஏற்பட்டிருக்கிறது. இந்த மாற்றத்தை நாம்தான் செய்தோம். இதற்காக நீங்கள் (ஆதரவாளர்கள்) பிரச்சாரம் செய்தீர்கள், போராடினீர்கள், வாக்களித்தீர்கள். இப்போது மாற்றம் வந்துவிட்டது. நீங்கள் நாட்டை மாற்றிவிட்டீர்கள். நேர்மையாகச் சொல்வதானால் இது மிக நல்ல விஷயம். உங்களின் கடின உழைப்புக்கு நன்றி. கட்சியை மறுசீரமைக்கவும், அதன் மீது புதிய தோற்றத்தை ஏற்படுத்தவும் ஏறக்குறைய ஐந்து வருடங்களாக நாம் பிரிட்டன் வரலாற்றில் முக்கியமான நிகழ்வு. ரிஷி சுனக் நிதியமைச்சராக இருந்தபோதே பல மோசமான தடுமாற்ற காலத்திலும் அந்நாட்டின் பொருளாதாரம், வர்த்தகத்தை பெரும் சரிவில் இருந்து மீட்டுக் கொண்டு வந்தார்.

ஆனால் இது மக்களுக்கு போதுமானதாக இல்லை, மோசமான விலைவாசி காரணத்தால் இன்றளவும் மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டு உள்ளது. கன்சர்வேடிவ் ஆட்சியின் இறங்கு முகம் பிரெக்சிட் பிரச்சனையில் இருந்து துவங்கியது. இதன் வெளிப்பாடே லேபர் கட்சியினர் வெற்றியை உறுதி செய்துள்ளது

இந்த நிலையில் லேபர் கட்சியின் தலைவரான கெய்ர் ஸ்டார்மர் பிரிட்டன் நாட்டின் அடுத்த பிரதமராக இருப்பார், வர்த்தகர்களும் முதலீட்டாளர்களும் ஏற்கனவே லேபர் கட்சியினர் பெரும் வெற்றி பெறுவார்கள் என எதிர்பார்த்திருந்த நிலையில் இந்த வெற்றி அதனை உறுதி செய்துள்ளது.

"நமது நாடு மாற்றத்திற்கும் அரசியல் மீண்டும் பொது சேவைக்கு திரும்புவதற்கும் தீர்மானமாக வாக்களித்துள்ளது," என்று அவர் கூறினார்.

இருப்பினும், "ஒரு நாட்டை மாற்றுவது ஒரு சுவிட்சை ஃபிலிக் செய்வது போல் இல்லை", என்று ஸ்டார்மர் கூறினார், உலகம் "அதிக நிலையற்றதாக" மாறிவிட்டது என்று குறிப்பிட்டார்.

மாற்றத்திற்கான பணிகள் உடனடியாக தொடங்கும், ஆனால் நேரம் வரும் என்றார்.

புதிய பிரதமர், "என்னைப் போன்ற தொழிலாளி வர்க்க குடும்பங்கள் தங்கள் வாழ்க்கையை கட்டியெழுப்ப முடியும்" என்ற விஷயங்களில் கவனம் செலுத்தினார்.

"உங்கள் குழந்தைகளுக்கு பிரிட்டன் சிறப்பாக இருக்கும் என்று நீங்கள் நம்புகிறீர்களா என்று நான் இப்போது உங்களிடம் கேட்டால், உங்களில் பலர் இல்லை என்று சொல்வீர்கள் என்று எனக்குத் தெரியும் – எனவே நீங்கள் மீண்டும் நம்பும் வரை எனது அரசாங்கம் கருத்தும் இல்லை.

ஆனால், நீண்ட காலத்திற்கு, அதன் பரந்த இலக்குகளை அடைய தொழிற்கட்சி நான்கு முக்கியப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டும், அவை அடுத்தடுத்த அரசாங்கங்களைத் துன்புறுத்தியுள்ளன.

முதலாவதாக சமூகப் பாதுகாப்பு. கவுன்சில்,வீட்டுவசதி, பல்கலைக்கழக நிதி மற்றும் வறுமை.. இவை மிகவும் கடினமானவை, ஏனென்றால் தீர்வுகளுக்கு நீண்டகால அர்ப்பணிப்பு வளங்கள் தேவைப்படும், மேலும் அரசியல் செலவுகள் மற்றும் அவற்றைச் சமாளிப்பதில் நன்மைகள் இருக்கும். ஆனால் அவை அனைத்தும் இப்போது நெருக்கடி நிலையை அடைந்துள்ளன, அங்கு நடவடிக்கை அவசரமாக தேவைப்படுகிறது.

தொழிலாளர்களின் வளர்ச்சி மற்றும் சீர்திருத்த நோக்கங்களை அடைவதற்கு அவற்றைத் தீர்ப்பது இன்றியமையாதது. இந்த பணிகள் அனைத்தும் கால தாமதம் இல்லாமல் சரியான திட்டமிடல்

பெரும் பின்னடைவைச் சந்தித்துள்ளது. தற்போதைய பிரதமர் ரிஷி சூனக் தலைமையில் நடைபெற்ற தேர்தல் என்பதால், தோல்வியை ஒப்புக்கொண்டு அதற்கான பொறுப்பை ஏற்றுக்கொள்வதாக அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த தேர்தலுடன் ஒப்பிடும்போது, கன்சர்வேட்டிவ் கட்சி 121 இடங்களில் மட்டுமே வெற்றி பெற்றுள்ளது மற்றும் 250 இடங்களை இழந்துள்ளது. இது அக்கட்சியினருக்கு மோசமான ஒரு தோல்வியாகப் பார்க்கப்படுகிறது.

பிரிட்டனின் வெளியுறவுச் செயலாளர் ஜேம்ஸ் க்ளெவர்லி  செய்தியாளர்களிடம் பேசுகையில், "முன்பு கன்சர்வேடிவ் கட்சிக்கு வாக்களித்த ஏராளமான மக்கள் தற்போது சீர்திருத்தக் கட்சிக்கு வாக்களித்துள்ளனர். இழந்த மக்கள் செல்வாக்கை எப்படித் திரும்பப் பெறுவது என்று கன்சர்வேடிவ் கட்சியினர் சிந்திக்க வேண்டும்" எனத் தெரிவித்தார்.

பிரிட்டனில் மாற்றம் இப்போது தொடங்குகிறது என்றும், நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப தொடங்குவோம் என்றும் லேபர் கட்சித் தலைவர் கீர் ஸ்டார்மர் தெரிவித்துள்ளார்.

பிரிட்டனில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் கீர் ஸ்டார்மர் தலைமையிலான பாடுபட்டுள்ளோம்.

இந்த வெற்றி நாம் ரசிப்பதற்கானது. அதேநேரத்தில் நம் முன்னால் சவால்கள் காத்திருக்கின்றன. நாட்டை புதுப்பிக்கும் பணி நம் முன் உள்ளது. பிரிட்டனை மீட்டெடுக்க நாம் தயாராக இருக்கிறோம். நாட்டின் மீதிருந்த ஒரு சுமை நீங்கிவிட்டது. ஆம், இறுதியாக அந்த சுமை நீக்கப்பட்டுவிட்டது.

இந்த பெரிய தேசத்தின் புதிய விடியல் தற்போது தோன்றி இருக்கிறது. இனி நாம் நம்பிக்கையின் ஒளியுடன் நடக்கலாம். நாட்டு மக்கள் நமக்கு ஆணையிட்டுள்ளார்கள். இந்த ஆணை, ஒரு பெரிய பொறுப்புடன் வந்திருக்கிறது. இன்றுமுதல் நாம் புதிய அத்தியாயத்தைத் தொடங்குவோம். மாற்றத்திற்கான வேலையைத் தொடங்குவோம். அரசியல் என்றால் அது பொது சேவை செய்வதற்கானது என்ற நிலையை மீண்டும் நாம் உருவாக்குவோம். நமது அரசு நன்மைக்கான சக்தியாக இருக்கும் என்பதை நாம் காட்டுவோம்" என தெரிவித்தார்.

இந்த 14 ஆண்டுக் கால கன்சர்வேடிவ் ஆட்சியில் பல பிரச்சனைகளை இந்த அரசு சந்தித்தது. இதில் முக்கியமாக ரிஷி சுனக்–ன் பிரதமராக பதவியேற்றியது

இங்கிலாந்தின் புதிய பிரதமர் கெய்ர் ஸ்டார்மர் தனது அமைச்சரவையை நியமித்து, ஏஞ்சலா ரெய்னரை துணைப் பிரதமராகவும், ரேச்சல் ரீவ்ஸ் நாட்டின் முதல் பெண் கருவூல அதிபராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஸ்டார்மரின் அமைச்சரவை 25 பேர் கொண்ட அணியில் 11 பெண்களை உள்ளடக்கி சாதனை படைத்தது.

இதற்கிடையில், யவெட் கூப்பர் உள்துறை செயலாளராகவும், டேவிட் லாம்மி வெளியுறவு செயலாளராகவும், ஜான் ஹீலி பாதுகாப்பு செயலாளராகவும் நியமிக்கப்பட்டனர்.

மற்ற நியமனங்களில் நீதித்துறை செயலாளராக ஷபானா மஹ்மூத், சுகாதார செயலாளராக வெஸ் ஸ்ட்ரீடிங், கல்வி செயலாளராக பிரிட்ஜெட் பிலிப்சன் மற்றும் எரிசக்தி செயலாளராக எட் மிலிபாண்ட் ஆகியோர் அடங்குவர்.

வெள்ளிக்கிழமை டவுனிங் தெருவில் பிரதமராக தனது முதல் உரையில், ஸ்டார்மர் நாட்டின் "போராடும்" சுகாதார அமைப்பை மீண்டும் பாதையில் கொண்டு வரவும், பிரிட்டிஷ் எல்லைகளைப் பாதுகாக்கவும், பள்ளிகள் மற்றும் மலிவு வீடுகளின் தேவையைப் பூர்த்தி செய்வதாகவும் உறுதியளித்தார்.

போராடும்," என்று அவர் கூறினார்.

பழமைவாத கட்சியின் 14 ஆண்டுகால ஆட்சியை முடிவுக்கு கொண்டு வந்து, மக்களின் பேராதரவுடன் ஸ்டார்மர் ஆட்சிக்கு வந்தாலும் அவர் பல கடினமான சவால்களை எதிர்கொள்ள வேண்டி உள்ளது. இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு பிரிட்டனின் வரிச்சுமை மிக அதிகமாக உள்ளது. நிகரக் கடன் கிட்டத்தட்ட வருடாந்திர பொருளாதார உற்பத்திக்கு சமமாக உள்ளது. வாழ்க்கைத் தரம் வீழ்ச்சியடைந்துள்ளது.  சுகாதார சேவை போன்ற பொது சேவைகள், வேலைநிறுத்தங்களால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில் புதிய பிரதமர் பல்வேறு முக்கிய முடிவுகளை எடுக்க வேண்டிய இக்கட்டான சூழலில் தான் ஆட்சிக்கு வரவுள்ளார்.மாற்றத்திற்கான ஆணையுடனும், பொருளாதாரத்தை வளர்க்கவும், பொதுச் சேவைகளை மீண்டும் கட்டியெழுப்பவும் பெரிய லட்சியங்களுடனும் தொழிலாளர் ஆட்சிக்கு வந்துள்ளது. அது தன்னால் விதிக்கப்பட்ட செலவின வரம்புகளுக்குள் வைத்துக்கொண்டு, அதன் ஆரம்பகால உறுதிமொழிகளை செயல்படுத்துவதற்கு விரைவாக செல்ல விரும்புகிறது. உண்மையில் இது ஒரு சவாலான பணி என்பதில் எந்த மாற்றுக் அடிப்படையில் நடைபெற்றதாக அமைய வேண்டும்.

தேர்தல் பிரச்சாரத்தில், தொழிற்கட்சி இந்தப் பகுதிகளில் பெரும்பாலானவற்றில் அதன் திட்டங்களைப் பற்றி அதிகம் கூறவில்லை. ஆனால் இப்போது அது அரசாங்கத்தில் இருப்பதால், அது தொழிற்கட்சியின் மைய இலக்குகளைத் தகர்த்து, அரசாங்கத்தின் மீதான நம்பிக்கையை மீளக் கட்டியெழுப்பும் கட்சியின் நம்பிக்கையைத் தடுக்கும் வகையில் ஒரு ஒத்திசைவான மூலோபாயத்தை உருவாக்க வேண்டும்.

எப்போதும் எந்தவொரு தேசத்திலும் வெற்றி பெற கூடிய கட்சி மற்றும் அதன் தலைமை மீது பொது மக்கள் அதிகம் எதிர் பார்ப்பு இருக்கும் . ஆனால் அதனை சுணக்கம் இல்லாமல் நிறைவேற்றி தருவதில் தான் புதிய ஆட்சியின் வெற்றி உள்ளது என்பதே அரசியல் புரிதலாக இருக்கிறது.

## பாலஸ்தீனத்திற்கு இரண்டு நாடுகள் தீர்வு வேண்டும்!

பிரித்தானிய பிரதமர் கீர் ஸ்டார்மெர் பாலஸ்தீன மக்களின் உரிமைகளை


தொடர்ச்சி 8 ம் பக்கம் பார்க்க....

# பேருவவளை பாடசாலைகளின் மாணவர்கள் சீனா விஜயம்



(பீ.எம்.முக்தார்)

சீனாவில் நடைபெறும் 2024 படழுடியட இளைஞர் மாநாட்டில் பங்கு பெற்றதற்காக பேருவளையிலிருந்து பல பாடசாலைகளைச் சேர்ந்த ஐந்து பழைய மாணவர்கள் சீனாவிற்கான 10 நாள் விஜயமொன்றை மேற்கொண்டுள்ளனர்.

இலங்கை-சீனா சமூக கலாச்சார நட்புறவு சங்கத்தின் முயற்சியினால் இலங்கையில் இருந்து சுமார் 30 இளைஞர்கள் இந்த மாநாட்டில் பங்கு பற்றுகின்றனர்.

சங்கத்தின் நிறைவேற்று குழு உறுப்பினர் இபாம் ஹனபியின் வேண்டுகோளின் பேரில் பேருவளை பகுதியைச் சேர்ந்த ஐந்து மாணவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கொழும்பு சர்வதேச பாடசாலை மாணவன் அய்மன் சப்ராஸ், கொழும்பு ஸாஹிராக் கல்லூரி மற்றும் பேருவளை கோல்டன்கேட் சர்வதேச பாடசாலை பழைய மாணவனான எம்.ஏ.எம். பிலால், கொழும்பு வாணிப முகாமைத்துவ பாடசாலை மாணவன் இஸ்மாயில் ஹாஷிம் ரிபான் ஆகியோர் சான்டொங் (shandong) மாகாணத்திற்கும், கொழும்பு ஸாஹிரா கல்லூரி மற்றும் பேருவளை விஸ்டம் சர்வதேச பாடசாலை பழைய மாணவன் முஹம்மத் சம்ஸ் காஸ ிம் முஹம்மத் ருசைத், பேருவளை விஸ்டம் சர்வதேச பாடசாலை மற்றும் கொழும்பு ஸாஹிரா கல்லூரி ஆகிய பாடசாலைகளின் பழைய மாணவர் முஹம்மத் பர்ஸ ான் முஹம்மத் அஷ்மல் ஆகியோர் நின்ஸியா மாகாணத்திற்கு விஜயம் செய்கின்றனர்.

இவர்களுள் அய்மன் சப்ராஸ், எம்.ஏ.எம்.பிலால், இஸ்மாயில் ஹாஷிம் சீனா நோக்கி பயணமாகினர்.

இலங்கையில் இருந்து செல்லும் 30 இளைஞர்கள் மேற்படி இளைஞர் மாநாட்டில் பங்குபற்றுவதோடு அங்குள்ள பாடசாலைகள், பல்கலைக் கழகங்கள், இளைஞர் மத்திய நிலையங்கள், தலைமைத்துவ பயிற்சி வழங்கப்படும் இடங்களுக்கும் செல்லவுள்ளனர்.

சீனா நின்ஸியா மாகாணத்துடன் பேருவளை தொகுதியை இணைத்து எதிர்காலத்தில் பாரிய வேலைத் திட்டங்களை முன்னெடுக்கும் நோக்குடன் ஒப்பந்தமொன்றும் கைச்சாத்திடப்பட்டது.

சீனாவுக்கு விஜயம் செய்த மேல் மாகாண சபை முன்னாள் உறுப்பினர் இஸ்திகார் ஜெமீல் நின்ஸ ியா மேயர் (Bai yuzhem) உடன் ஒப்பந்தத்திற்கான ஆவணத்தில் கைச்சாத்திட்டார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.



கிராமிய வீதி அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் மிஹிந்தலை பிரதேச செயலக பகுதிக்குட்பட்ட இல 577 கிராம அலுவலகர் பிரிவிலுள்ள தெற்கு மின்சார வீதிக்கு தார் இட்டு செப்பனிடுவதற்கான பணியை இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க ஆரம்பித்து வைத்தார். (எம்.ரீ.ஆரிப்)

# சமாதான நீதிவான்



பூகொடை குமாரிமுல்லையைச் சேர்ந்த எம்.எச் எப் முஷர்ரப் ஆகில இலங்கை சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இரத்தினபுரியைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் பிரபல தொழிலதிபரும சமூக சேவகருமாவார்.

நீதியமைச்சின் இணைப்புச் செயலாளர் எல்விட்டிகலவிடமிருந்து இதற்கான கடிதத்தை பெற்றுக் கொள்வதையும் அருகில் வவுனியா சிறைச்சாவைகள் மேற்பார்வை குழுவின் தலைவர் முஹம்மத் நிப்ராஸ் இருப்பதையும் காணலாம்.

# சாய்ந்தமருது லீடர் அஸ்ரப் வித்தியாலய மாணவிகள் மாகாண மட்ட விளையாட்டுப் போட்டிக்குத் தெரிவு




(நூருல் ஹுதா உமர்)

கல்முனை கல்வி வலய சாய்ந்தமருது கமு/ கமு/ லீடர் எம்.எச்.எம்.அஸ்ரப் வித்தியாலய மாணவிகள் இம்முறை நடைபெற்ற வலய மட்ட விளையாட்டுப் போட்டிகளில் 10 வெற்றி இடங்களை தனதாக்கி மாகாணப் போட்டிகளுக்கு தகுதி பெற்றுள்ளனர்.

ஒவ்வொரு வருடமும் கல்வியிலும், விளையாட்டு, கலை, இலக்கிய போட்டிகளிலும் பிரகாசிக்கும் இந்த பாடசாலை மாணவர்கள் கடந்த காலங்களில் மாகாண மற்றும் தேசிய அளவில் பிரகாசித்திருந்தனர். அதன் தொடர்ச்சியாக பாடசாலையின் உடற்கல்வி ஆசிரியர் எம்.எப். எம்.றிபாஸ் ,விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் ஏ.என்.எம். ஆபாக் ஆகியோர்களின் பயிற்சியின் பயனாக இந்த அடைவுகள் கிடைத்துள்ளதாகவும் அந்த மாணவர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவிப்பதோடு சிறப்பான முறையில் தயார் படுத்திய பயிற்றுவிப்பாளர்கள் மற்றும் இணைப்பாடவிதானத்திற்கு பொறுப்பான உதவி அதிபர் எம். எம். ஹாத்திம் ஆகியோர்களுக்கு பாடசாலை சமூகம் சார்பாக விசேட நன்றிகளை தெரிவித்துக் கொள்வதாக பாடசாலை அதிபர் எம்.ஐ.சம்சுதீன் தெரிவித்துள்ளார்.

# அபாகஸ் கல்வி பயிலும் நான்கு மாணவர்களுக்கு மலேசியாவில் இரண்டாமிடம்





(அஸ்ஹர் இப்றாஹிம்)

ஜென்டிங் இன்டர்நேஷனல் அபாகஸ் போட்டி மலேசியாவின் ஜென்டிங் நேஷனல் கன்வென்ஷன் ஹாலில் அண்மையில் வெற்றிகரமாக நடைபெற்றது.

இதில் மலேசியா கல்வி அமைச்சின் விளையாட்டு, பாடத்திட்டம் மற்றும் கலைப் பிரிவின் உதவி இயக்குநர் டாக்டர். முகமட் அஸ்லி பின் ஜகாரியா கலந்து கொண்டு சிறப்பித்தார்.

இன் நிகழ்வில் இலங்கையின் ஏக பிரதிநிதிகளான ஐஊயுஆ யுடீயுஊருளு குழு, 90 மாணவர்கள் பங்கேற்றனர். இதில் 12 முதல் இடங்கள், 15 இரண்டாம் இடங்கள், 18 மூன்றாம் இடங்கள், 20 ஆறுதல் பரிசுகள் மற்றும் 25 பங்கேற்பு விருதுகளைப் பெற்று, சர்வதேச தரத்தில் ஐஊயுஆ யுடீயுஊருளு மாணவர்கள் இலங்கைக்கு பெருமை சேர்த்துள்ளனர்.

இதில் சாய்ந்தமருது இல்முவில் கல்வி பயிலும் கல்முனை மரியா தெரேசா சர்வதேச கல்லூரியைச் சேர்ந்த பாத்திமா ஹிபா ஹானி, நிந்தவூர் சீ.ஓ.லெஸ்தகிர் சர்வதேச பாடசாலையைச் சேர்ந்த எம்.என்.எம். நப்தால், கல்முனை ஸாஹிரா தேசியக் கல்லூரியைச் சேர்ந்த என்.எம். சிம்ஹான், கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியைச் சேர்ந்த ஜே.பாத்திமா ரொஸ்னி ஆகியோர் சர்வதேச ரீதியில் இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுர குமார திஸாநாயக அம்பாறை மாவட்ட வர்த்தக பிரமுகர்களுடன் சந்திப்பு





(அஸ்ஹர் இப்றாஹிம்)

தேசிய மக்கள் சக்தி (NPP) அம்பாறை மாவட்ட கரையோர பிரதேச வர்த்தக பிரமுகர்களுடனான சினேக பூர்வ சந்திப்பு அண்மையில் காரைதீவு லேடி லங்கா மண்டபத்தில் இடம்பெற்றது.

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுர குமார திஸாநாயக்கா கலந்து கொண்டு தற்போதைய நாட்டின்அரசியல்நிலமைதொடர்பாக வர்த்தக பிரமுகர்கள் மத்தியில் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசமான மருதமுனை, நற்பிட்டிமுனை, பாண்டிருப்பு, கல்முனை, சாய்ந்தமருது, காரைதீவு, சம்மாந்துறை, நிந்தவூர் , ஒலுவில், அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று மற்றும் பொத்துவில் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த வர்த்தக பிரமுர்கள் கலந்து கொண்டனர்.



மத்திய மாகாண கல்வித்திணைக்களத்தின் ஏற்பாட்டில் மத்திய மாகாண வலயமட்ட பாடாசாலை மாணவர் மாணவியர்கள் மத்தியில் நடாத்தப்பட்ட மும்மொழிகளிலான மீலாத் தின விசேட பேச்சுப் போட்டிகளில் தெயிவு செய்யப்பட்ட மாணவர் மாணவியர் களுக்கு சின்னங்கள் அணிவித்து சான்றுகள் வழங்கும் நிஙழ்வு அக்குறணை மகளிர் தேசிய பாட சாலையில் இப்பாடசாலை அதிபர் திருமதி சுகீரா சித்தீக் தலைமையில் நடைபெற்றன. இதன்போது கல்விப்பணிப்பாளர் உனைஸ் உட்பட ஏனைய கல்விப் பணிப்பிளர்கள் முக்கிய பிரமுகர்கள் பலரும் கலந்துகொண்டதுடன் மிணவர் மாணவியர்களும் பெற்றோரும் சமூகமளித்திருந்தனர்.




நாச்சியாதீவு பர்வீன்

# நண்பேண்டா!

**-நாகூர் ரூமி-**

நண்பர் யுகபாரதியிடம் வேண்டுகோளாய் ஒரு வேலை கொடுத்திருந்தேன். ஏற்கனவே நாகூர் ஜஃபருல்லாஹ் நானாவின் “இது கண்களுக்கு அல்ல, மனசுக்கு“ என்ற தலைப்பில் தலைப்பு நானா கொடுத்தது -- கவிதைகளை நான்தான் கொண்டுவந்திருந்தேன். நாகூர் தமிழ்ச்சங்கத்தில் அதை வெளியிட்டோம்.

அப்போதே ஜஃபருல்லாஹ் நானாவுக்கு நினைவு தப்பியிருந்தது. ஒரு குழந்தையாட்டம் ஆகிவிட்டிருந்தார். தன்னுடைய கவிதை நூல் வெளியிடப்படுகிறது என்று அவருக்குத் தெரியவில்லை. ஆனால் என்னை மட்டும் தெரிந்திருந்தது! என் அருகில்தான் அமர்ந்தார். அதுவும் மேடையின் பின்பக்கமாக.

அக்கவிதைகளை அவரிடமிருந்து வாங்கி நான் தொகுத்த கதையை ஒரு காவியமாகவே எழுதிவிடலாம்! அவ்வளவு சிரமப்பட்டேன்! ஒரு சின்ன உதாரணம் சொல்கிறேன்.

ஆம்பூரில் அவர் கவிதைகளை எழுதிவைத்த தாளைப்பார்த்து அவர் சொல்லச்சொல்ல, அல்லது அவர் அருகில் இருக்க நானே, கம்ப்யூட்டரில் உள்ளிட்டுக்கொண்டிருந்தேன். திடீரென்று எழுந்து டிவி சீரியல் பாக்கச் சென்றார்.

‘நானா, உங்க கவிதையைத்தான் கம்ப்யூட்டரில் அடித்துக்கொண்டிருக்கிறேன். நீங்க பாட்டுக்கு டிவி பாக்கப்போறீங்க?’ என்றேன்.

‘ஓய், கவிதை முக்கியமா சீரியல் முக்கியமா?’ என்று கேட்டுவிட்டு சீரியல் பார்க்கச் சென்றுவிட்டார்! அவர் அப்படித்தான்!

நாகூர் ஹனிஃபா மாமா குரலில் உச்சஸ்தாயியில் பாடுவார் என்று நண்பர் யுகபாரதியிடம் சொன்னேன். அப்போது அவர் தங்கியிருந்த வீட்டுவசதி வாரிய ப்ஃளாட் ஒன்றுக்கு நானும் ஜஃபருல்லா நானாவும் சென்றிருந்தோம். யுகபாரதி நம்பவில்லை.

டெமோ மாதிரி ஏதோ கேட்டார் அல்லது நான் கேட்டுக்கொண்டேன். உடனே ஜஃபருல்லா நானா உச்சஸ்தாயியில் பாட ஆரம்பித்தார்! இரவு 12 மணிக்கு மேல்!

அய்யய்யோ, இருக்குமிடத்துக்கு இவர் உலைவைத்துவிடுவார் போலுள்ளதே என்று பயந்த யுகபாரதியும் நானும் அவரை ‘ஆஃப்’ செய்தோம்!

நானா இப்போது உயிரோடு இல்லை. ’அண்ணல் பெருமான் என் இல்லம் வந்தால் அவர்களை எப்படி வரவேற்பேன்’ என்ற அவர் எழுதிய பாடலுக்காக நிச்சயம் பெருமானாரோடு அவர் சுவனத்தில் இருப்பார் என்று நம்புகிறேன்.




# ஜிவிதம்

மெய்யில் பொடியும்
விரித்த கருங்குழலும்
கையில் தனித்து சிலம்பும் சிறு
பெண்ணும் கண்ணீரும்.

காற்றில்,
அன்று உன் உயிர் கோர்த்துக்
கிடந்தவள்
நீ மோகன இசை அமைக்க
பாடிய தாலாட்டு
இன்று முகாரியில்.

நாட்டில் ,
புவிப்பந்தாய் ஐங் கடலும்
உயிர்த்து
அலைபாய்ந்த உந்தியிலே
முத்தமிட்ட உன்
உதட்டில் உதைத்த
அச் சிறுகால்கள் தனித்தலையும்.

நாளை அவள்
பாலை உலகில் லீலியாய்
பூக்கையிலே
வாழ்த்திப்பாட கவிநான்
இருப்பேனோ...

(வ.ஐ.ச.ஜெயபாலன்)

6ம் பக்கத் தொடர்ச்சி...

உறுதியாக பின்பற்றும் வகையில் தனி நாடு கொடுத்தே ஆக வேண்டும் என்று தெளிவான முறையில் கூறிய கருத்துக்கள் சர்வதேச நாடுகள் மத்தியில் பேச்சு பொருளாக மாறி வருகிறது.

இஸ்ரேல் உடனடியாக நிரந்தர போர் நிறுத்தம் செய்ய வேண்டும் அதே நேரத்தில் இரண்டு நாடுகள் தீர்வு கண்டிப்பா தேவையான ஒன்று என்று பிரித்தானிய நாட்டின் புதிய பிரதமர் ஸ்டார்மெர் கூறினார். அதே சமயம் மேற்கு கரை அதிபர் முகமது அப்பாஸ் உடன் அவர் டெலிபோன் மூலம் பேசியதையும் இங்கே நாம் சுட்டி காட்ட வேண்டும்.

பிரித்தானிய நாட்டின் இந்த கருத்து அமெரிக்கா நாட்டிற்கு தடை கல்லாக அமையும் என்று கூறப்படுகிறது. தொடர்ந்து சர்வதேச நாடுகள் அனைத்தும் வேண்டுகோள் விடுத்த நிலையிலும் பெஞ்சமின் நிதான்யாகு அதனை கொஞ்சம் கூட கணக்கில் எடுத்துக் கொள்ள மறுத்து அவரது ஆட்சியை தக்க வைத்துக் கொள்ள பாலஸ்தீன மக்களை கொன்று குவித்து வருகிற நிலையில் ஸ்டார்மெரின் கருத்துக்கள் வலிமையான ஒன்று என்பதே உண்மையாகும். குறிப்பாக பிரிட்டன் பிரதமர் ஸ்டார்மெர் தண்ணீர் மற்றும் மின்சாரம் தடை செய்ய இஸ்ரேலிய நாட்டிற்கு உரிமை உண்டு என்கிற கருத்தை மிகவும் கடுமையாக விமர்சனம் செய்து இருக்கிறார். தற்போதைய நிலையில் இஸ்ரேலிய ராணுவம் மற்றும் அதன் செயல்பாடுகள் ஏற்க தக்கதல்ல என்பதில் உறுதியான நிலைப்பாட்டை ஸ்டார்மெர் தெளிவாக கோடிட்டுக் காட்டி உள்ளார்.அதே நேரத்தில் இரண்டு நாடுகள் மத்தியில் குறிப்பாக ஹிஸ்புல்லா மற்றும் இஸ்ரேலிய நாட்டின் இணையே போர் குறித்த கவலையும் அவர் வெளியிட்டுள்ளார். இதுவரையில் இந்த போரினுடாக 38000 மேற்பட்ட பொது மக்கள் படுகொலை செய்யப்பட்ட நிலையில் 80000 மேற்பட்டவர்கள் ஊனமுற்ற நிலையில் வாழ்நாள் முழுவதும் சமூகத்தின் பாரமாக மாறி விட்டார்கள். இந்த நிலையில் கூட இஸ்ரேலிய ராணுவம் மற்றும் அரசின் தலைமை அப்பாவி பொதுமக்கள் குழந்தைகளை கொன்று குவித்து வருவதை கண்டு சர்வதேச மனசாட்சி குமுறுகின்றது என்பதை யாரும் மறுக்க இயலாது.

பிரித்தானிய பிரதமர் கீர் ஸ்டார்மெர் பாலஸ்தீன மக்களின் உரிமைகளை உறுதியாக பின்பற்றும் வகையில் தனி நாடு கொடுத்தே ஆக வேண்டும் என்று தெளிவான முறையில் கூறிய கருத்துக்கள் சர்வதேச நாடுகள் மத்தியில் பேச்சு பொருளாக மாறி வருகிறது.

இஸ்ரேல் உடனடியாக நிரந்தர போர் நிறுத்தம் செய்ய வேண்டும் அதே நேரத்தில் இரண்டு நாடுகள் தீர்வு கண்டிப்பா தேவையான ஒன்று என்று பிரித்தானிய நாட்டின் புதிய பிரதமர் ஸ்டார்மெர் கூறினார். அதே சமயம் மேற்கு கரை அதிபர் முகமது அப்பாஸ் உடன் அவர் டெலிபோன் மூலம் பேசியதையும் இங்கே நாம் சுட்டி காட்ட வேண்டும்.

பிரித்தானிய நாட்டின் இந்த கருத்து அமெரிக்கா நாட்டிற்கு தடை கல்லாக அமையும் என்று கூறப்படுகிறது. தொடர்ந்து சர்வதேச நாடுகள் அனைத்தும் வேண்டுகோள் விடுத்த நிலையிலும் பெஞ்சமின் நிதான்யாகு அதனை கொஞ்சம் கூட கணக்கில் எடுத்துக் கொள்ள மறுத்து அவரது ஆட்சியை தக்க வைத்துக் கொள்ள பாலஸ்தீன மக்களை கொன்று குவித்து வருகிற நிலையில் ஸ்டார்மெரின் கருத்துக்கள் வலிமையான ஒன்று என்பதே உண்மையாகும். குறிப்பாக பிரிட்டன் பிரதமர் ஸ்டார்மெர் தண்ணீர் மற்றும் மின்சாரம் தடை செய்ய இஸ்ரேலிய நாட்டிற்கு உரிமை உண்டு என்கிற கருத்தை மிகவும் கடுமையாக விமர்சனம் செய்து இருக்கிறார். தற்போதைய நிலையில் இஸ்ரேலிய ராணுவம் மற்றும் அதன் செயல்பாடுகள் ஏற்க தக்கதல்ல என்பதில் உறுதியான நிலைப்பாட்டை ஸ்டார்மெர் தெளிவாக கோடிட்டுக் காட்டி உள்ளார்.அதே நேரத்தில் இரண்டு நாடுகள் மத்தியில் குறிப்பாக ஹிஸ்புல்லா மற்றும் இஸ்ரேலிய நாட்டின் இணையே போர் குறித்த கவலையும் அவர் வெளியிட்டுள்ளார்.

இதற்கிடையில் புதிய பிரதமர் ஸ்டார்மெர் பல்வேறு துறைகளில் மாற்றங்களைச் செய்ய ஆர்வமாக இருப்பதாக பிரித்தானிய ஊடகங்கள் கருதுகின்றன.

குறிப்பாக கீர் ஸ்டார்மெர் ஐரோப்பிய ஒன்றியத்தின் இடையேயான பல்வேறு தடைகளை தகர்த்த ஏற்றுமதி மற்றும் இறக்குமதி இடையே சமநிலை பேணும் போக்கு நிலைநிறுத்த ஆவன செய்வார் என்பதே முதன்மையான மாற்றமாக இருக்கலாம். ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து ஏற்றுமதி செய்யும் நிறுவனங்கள் மிகவும் கடுமையாக எழுத்து வடிவிலான பாரங்களை நிரப்ப வேண்டும். இனி முழுமையாக அதன் பயன்பாடு குறைக்கப்பட்டு டிஜிட்டல் வடிவ நிலைக்கு மாறும் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

இரண்டாவதாக, கடந்த ஆட்சியை போன்ற ராணுவம் சார்ந்த நிலைகள் அதன் கூட்டாளிகள் இனி மாறலாம். தொடர்ந்து அமெரிக்காவுடனா செயல்பாடுகளை அங்கீகாரம் செய்து வந்த நிலையில் இனி அமெரிக்காவின் ஆலோசனைகளை பிரித்தானிய முழுமையாக நிராகரித்து விட அதிக வாய்ப்பு உள்ளது. அதற்கு மாறாக ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் பிரித்தானிய நாட்டின் ராணுவம் இரண்டும் இணைந்த கூட்டு பயிற்சி மற்றும் செயல்பாடுகளை அமைத்து கொள்ள அதிக வாய்ப்பு உள்ளது குறிப்பிடத்தக்கது.

பிரான்ஸ் நாட்டில் இருந்து பிரித்தானிய நாட்டிற்கு உள்ளாக ஊடுருவல் செய்து வரும் அகதிகள் பிரச்சினைகளைத் கீர் ஸ்டார்மெர் தலைமையிலான அரசு சாதுர்யமாக நட்புடன் தீர்வை எட்டும் என்று எதிர்பார்ப்பு நிலவுகிறது.

அதேநேரத்தில் வட புல கடல் பகுதியில் உள்ள எரிபொருள் மற்றும் தொடர்புடைய எண்ணெய் வளத்தை கட்டுப்படுத்த பிரித்தானிய அரசு புதிய முயற்சியை மேற்கொள்ளும்.

அதே சமயம் பிரித்தானியவின் குடியேற்றம் செய்து வாழ்ந்து வருகின்ற வெளி நாட்டினர் அந்த நாட்டில் வாங்கும் சொத்துக்களுக்கு அதிகம் வரி விதிப்பு இருக்கும் என்று நம்பப்படுகிறது. இனி பிரித்தானிய நாட்டில் வீடுகள் வாங்க முயலும் வெளிநாட்டினர் அதிகம் வரி கட்ட வேண்டிய நிலை ஏற்படும் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த காலங்களில் பிரித்தானிய நாட்டின் தலைவர்கள் செய்த பல்வேறு தவறுகளை தொழிற் கட்சியின் தலைமை இனி ஈடுபட வாய்ப்பு இல்லை என்கிற செய்தியை தான் புதிய பிரதமர் ஸ்டார்மெர் சர்வதேச நாடுகளுக்கு தெரிவித்து உள்ளார். ஏனெனில் ஈராக் நாட்டில் அணு ஆயுத சோதனை என்ற பெயரில் அமெரிக்கா அரசு எடுத்த சுயாதீன நடவடிக்கைகளுக்கு கடந்த காலங்களில் தொழிற் கட்சியின் தலைமை அதாவது டோனி பிளேயர் உடனிருந்து செயல்பட்டது போன்ற இமாலய தவறுகளை இந்த முறை தொழிற் கட்சி செய்யாது என்பது போன்ற எதிர்பார்ப்புகள் புதிய பிரதமர் ஸ்டார்மெர் தலைமையிலான அரசின் மீது ஏற்பட்டுள்ளது. அதற்கு அதிகமான வாய்ப்புகள் உள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்த தேர்தலில் தொழிற்கட்சியின் வெற்றி ஐரோப்பிய ஒன்றியத்திற்கு நுரு தெளிவான சமிக்ஞையை அனுப்புகிறது. பிரித்தானிய அரசு, ஐரோப்பாவுடனான அதன் உறவை மேம்படுத்த தயாராக உள்ளது. இரு கூட்டாளிகளுக்கு இடையேயான உறவுகள் எவ்வளவு தூரம் வளரும் என்பது தொழிற்கட்சி அரசாங்கத்தின் லட்சியங்கள் மற்றும் வர்த்தகம் என்று வரும்போது ஐரோப்பிய ஒன்றியம் எதை ஏற்க விரும்புகிறது. இருந்த போதிலும் பிரித்தானிய மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் உடனான உறவுகள் வரும் காலங்களில் எந்த அளவுக்கு பிணைப்புடன் செயல்படும் என்பதில் பல்வேறு கருத்துக்கள் இருந்த போதிலும் தொழிற் கட்சியின் வெற்றி தற்போதைய வெளிப்படுத்தும் செய்தி அவர்களுக்குள் வருங்காலத்தில் நல்ல இணைப்பை ஏற்படுத்த இது முன்னுதாரணமாக எடுத்து கொள்ள முடிகிறது. ஐரோப்பிய ஒன்றியத்தின் இடையேயான பல்வேறு பிணக்குகளை தீர்க்க தொழிற் கட்சியின் வெற்றி வழிவகுக்கும் என்பதே மேற்குலக ஆய்வாளர்களின் கருத்தாகும். ஆயினும் பிரித்தானிய நாட்டிற்கும் ஐரோப்பிய ஒன்றியத்தின் இணையான வர்த்தகம் விரிவடையும் சாத்தியக் கூறுகள் உள்ள நிலையில் பிரிக்ஸிட் கூட்டமைப்பில் இணைந்து செயல்பட தற்போது வாய்ப்புகள் இல்லை என்பதே உண்மையாகும். சர்வதேச நாடுகள் மத்தியில் ராணுவம் மற்றும் புதிய தொழில் நுட்ப அறிவுகளை பகிர்ந்து கொள்ளும் பொருட்டு இரண்டு ( UK -- EU) இடையில் ஏற்படும் புதிய தொடர்புகள் மூலம் எல்லா வகையிலும் ஐரோப்பிய ஒன்றியம் பயனடைய அதிகம் சாத்தியம் உள்ளது.

# வொய்ஸ் ஒப் ஏறாவூர் அமைப்பின் ஏற்பாட்டில் அறிவுக்களஞ்சியம் நிகழ்வு



(உமர் அறபாத்)

மாணவர்களின் அறிவுத்திறனை விருத்தி செய்யும் நோக்குடன் ஏறாவூர் கல்வி கோட்டத்தில் காணப்படுகின்ற பாடசாலைக்கு இடையிலான தொடரான அறிவுக்களஞ்சியம் போட்டி நிகழ்வு வொய்ஸ் ஒப் ஏறாவூர் அமைப்பின் ஏற்பாட்டில் மூன்றாவது கட்டமாக அன்று ஏறாவூர் மட் / அல் அஸ்ஹர் மகளிர் உயர்தர பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது.

இன்றைய அறிவுக்களஞ்சிய போட்டியில் ஏறாவூர் முனீரா பாலிகா மகாவித்தியாலயம் மற்றும் ஏறாவூர் மட் அல் –அஸ்ஹர் மகளிர் உயர்தர பாடசாலை மாணவிகள் பங்குபற்றி இருந்தனர். இரண்டு சுற்றுக்களாக இடம்பெற்ற அறிவுக்களஞ்சியப் போட்டியில் மொத்த புள்ளிகளின் அடிப்படையில் மேலதிக 60 புள்ளிகளால் ஏறாவூர் மட் / அல் அஸ்ஹர் மகளிர் உயர்தர பாடசாலை இடம்பெற்ற அறிவுக்களஞ்சிய போட்டியினுடைய வெற்றியினை தனதாக்கி கொண்டது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக நஸீஹா கன்ஷ்ரெக்சன் நிறுவனத்தின் பணிப்பாளரும் ஏறாவூர் நகரசபையின் முன்னாள் தவிசாளருமான எம்.எஸ்.எம்.நழீம் கலந்து சிறப்பித்தார்.

# ஸம் ஸம் பௌண்டேசனின் மதம் கடந்த மனிதம்



(அஷ்ரப் ஏ சமத்)

ஸம் ஸம் பௌன்டேசன் மதம் கடந்த மனிதம் என்ற நிறுவனத்தின் அனுசரனையில் கண்டி எலமல்தெனிய ஸம்.ஸம் பௌன்டேசனின் கண்டி பயிற்சிக் கல்லுாரியில் ஊடகவியலாளர்கள் 45 பேர் கலந்து கொண்ட விளக்க் செயலர்வு ஞயிற்றுக்கிழமை 14ஆம் திகதி நடைபெற்றது.

இச் செயலர்மர்வில் கொழும்பு கண்டி பிரதேச ஊடகவிலாளர்களும் கலந்து கொண்டனர். அத்துடன் இவ் நிறுவனத்தின் ஸ்தாபகத் தலைவர் அஷ்ஷேக் யூசுப் முப்தி, தலைமையில் நடைபெறறது. அத்துடன் பிரதான நிறைவேற்று அதிகாரி மொஹமட் ஹிசாம், ஊடக இணைப்பாளர் இன்பாஸ் சலாஹூத்தீன் ஆகியோர்கள் பின்வரும் தலைப்புக்களில் மற்றும் ஸம்.ஸம் பவுண்டேசன் ஒர் சர்வதேச அரசசார்பற்ற தொண்டர் நிறுவனமாக அவர்கள் செய்யும் சேவைகளும் சம்பந்தமான விளக்கங்களும் காட்சிப்படுத்தப்பட்டன இன மதங்களுக்கு அப்பால் இந்த நாட்டில் கல்வி, வாழ்வதாரம், வீடமைப்பு இன ஐக்கியம், பல்லின சமுகங்களுடனான ஐக்கியம் போன்ற துறைகளில் ஊடகவியலாளர்களுடன் கலந்துரையாடப்பட்டன இந் நிறுவனம் கடந்த 15 வருடங்களாக இந் நாட்டில் சகல சமூகங்களுக்கும் தமது சேவைகளை செய்து வருகின்றது.

அத்துடன் ஊடகவியலாளர்கள் பற்றிய முன்னேற்றம் , வளர்ந்து வரும் இளைஞர்கள் யுவதிகள் ஊடகப் பயிற்றுவிப்புக்கள், பய்றிச்சிப் பட்டரைகளை நடாத்துதல் ஊடகத்துறை டிப்ளோமா போன்ற பயிற்சிகளை பயிலும் ஊடகவியலாளர்களுக்கு அவர்களது பயிற்சிநெறிகளுககு புலமைப் பரிசில் வழங்குதல் போன்ற தலைப்புக்களில் பலவேறு கருத்துக்கள் பறிமாறப்படடன.

# ஈரானிய ஜனாதிபதி பெஸெஷ்கியான் யார்?

## அவர் என்ன செய்யப்போகிறார்?



தாஹா முஸம்மில்

ஈரானின் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மசூத் பெஸெஷ்கியன் நாட்டின் ஜனாதிபதி போட்டியில் வெற்றி பெற்ற பின்னர் தனது முதல் பொது உரையை நிகழ்த்தினார், தனது பிரச்சார வாக்குறுதிகளை நிறைவேற்றுவதாக உறுதியளித்துள்ளார்.

அவரது வெற்றியைத் தொடர்ந்து தெஹ்ரானில் உள்ள இஸ்லாமிய குடியரசின் மறைந்த நிறுவனர் இமாம் கொமெய்னி (ரஹ்) அவர்களின் ஞாபகார்த்த மண்டபத்தில் தனது ஆதரவாளர்கள் மற்றும் பொது மக்கள் மத்தியில் உரையாற்றிய போதே அவர் இந்த கருத்துக்களை தெரிவித்தார்.

“இந்த தேர்தலில் நான் என்னால் செயல்படுத்த முடியாதபொய்யான வாக்குறுதிகள் எதையும் நான் அளிக்கவில்லை. முடியாத ஒன்றை சொல்லி உங்கள் வாக்குகளை பெற்றால், நாளை அது பொய்யாகிவிடும்” என்று பெஸெஷ்கியன் கூறினார்.

”நான் அல்லாஹ்வின் கட்டளைக்கு கட்டுப்பட்டுள்ளேன், உங்களுக்கும் உங்கள் சேவைக்காக என்னை அர்ப்பணிக்கிறேன்” என்று அவர் குறிப்பிட்டார்.

30 மில்லியனுக்கும் அதிகமான வாக்காளர்கள் வாக்களிக்க வாக்குச் சாவடிகளில் ஆர்வத்துடன் பங்கேற்றதற்காக ஈரான் மக்களுக்கு அவர் நன்றி தெரிவித்தார்.

இம்மாதம் 30 ஆம் திகதி பதவிப்பிரமாணம் செய்யவுள்ள பெஸெஷ்கியன் தனது திட்டங்களில் சிலவற்றை குறிப்பிட்ட அவர் உரையாடல், ஒருங்கிணைப்பு மற்றும் ஒருமித்த தேசிய கருத்தை முன்னெடுக்க முயல்வதாகக் கூறினார், மேலும் நாட்டின் பிரச்சினைகள் - பொருளாதார, சமூக, கலாச்சார மற்றும் அரசியல் - போன்ற அனைத்து பகுதிகளிலும் தீர்க்க பாடுபடுவேன் என்று உறுதியளித்தார்.

ஈரானிய மக்களின் ஆதரவு மற்றும் புத்திசாலித்தனமான தலைமையின் தேவையை அவர் உறுதிப்படுத்தினார். இஸ்லாமியப் புரட்சியின் மறைந்த தலைவரான இமாம் கொமெய்னி காட்டிய தியாகிகளின் பாதையைத் தொடர உறுதிமொழி வழங்கினார்.

”இந்த மோசமான சூழ்நிலைகளுக்கு மத்தியில் அரசாங்கத்தின் வேலை கடினமானது,” என்று குறிப்பிட்ட அவர், ”இடையூறுகள், சவால்கள் மற்றும் நெருக்கடிகளை” வெற்றிகரமாக கடந்து செல்வதற்கான ”பெரும் சோதனையை” நாடு எதிர்கொண்டது என்றார்.

இதற்கிடையில், தேர்தல் செயல்பாட்டில் அதிக மக்கள் பங்கேற்புக்கு வழி வகுத்ததற்காக இஸ்லாமிய புரட்சியின் தலைவர் ஆயதுல்லா செய்யித் அலி கமேனிக்கு பெஸெஷ்கியன் நன்றி தெரிவித்தார்.

தேர்தல் தலைமையகம் அறிவித்த இறுதி வாக்கு எண்ணிக்கையின்படி, ஈரான் இஸ்லாமிய குடியரசின் ஒன்பதாவது ஜனாதிபதியாக பெஸெஷ்கியான் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

மொத்தமுள்ள 30,530,157 வாக்குகளில் அவர் 16,384,403 வாக்குகளைப் பெற்றார், அதே நேரத்தில் அவரை எதிர்த்துப் போட்டியிட்ட ஜலீலி நடந்த இரண்டாம் கட்டத் தேர்தலில் 13,538,179 வாக்குகளைப் பெற்றார்.

வடமேற்கு ஈரானில் மே 19 அன்று ஹெலிகாப்டர் விபத்தில் இறந்த ஜனாதிபதி இப்ராஹிம் ரைசிக்கு பதிலாக பெஸெஷ்கியன் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

ஈரான் இஸ்லாமிய குடியரசின் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட மசூத் பெஸெஷ்கியன் பற்றிய சில விவரம்

செப்டம்பர் 29, 1954 அன்று மேற்கு அசர்பைஜான் மாகாணத்தின் மஹாபாத்தில் பிறந்த பெஸெஷ்கியன், 12 வது ஈரானிய நாடாளுமன்றத்தில் வடமேற்கு நகரமான தப்ரிஸை பிரதிநிதித்துவப்படுத்தியிருந்தார்.

கடந்த மாதம் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட 12 உறுப்பினர்களைக் கொண்ட தேர்தல் மேற்பார்வை அமைப்பான அரசியலமைப்பு கவுன்சில் (கார்டியன் கவுன்சில் என்றும் அழைக்கப்படுகிறது) ஒப்புதல் அளித்த ஆறு வேட்பாளர்களில் பெஸெஷ்கியானும் ஒருவர்.

ஜூன் 28 இல் இடம்பெற்ற முதலாம் கட்ட தேர்தலில் அவர் 10.4 மில்லியன் வாக்குகளைப் பெற்று முன்னணியில் இருந்தார், அவரைத் தொடர்ந்து ஜலீலி 9.4 மில்லியன் வாக்குகளைப் பெற்றார், இருப்பினும் இருவருமே அறுதி பெரும்பான்மையான 50 சதவிகிதம் மற்றும் ஒரு பெற்றிருக்க பெறவில்லை.

ஜனாதிபதி முகமது காத்தமியின் அரசாங்கத்தில் (2001-2005) முக்கியமான சுகாதார அமைச்சராக பதவிவகித்தார்.

ஓர் அனுபவமிக்க பாராளுமன்ற உறுப்பினரான பெஸெஷ்கியான் 8வது, 9வது, 10வது மற்றும் 11வது பாராளுமன்றங்களுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டார். 2016 மற்றும் 2020 க்கு இடையில், அவர் முதல் துணை சபாநாயகர் பதவியையும் வகித்தார்.

அவர் இதற்கு முன்னர் 2013 மற்றும் 2021 இல் ஜனாதிபதி பதவிக்கு போட்டியிட்டிருந்தார், எனினும் இரண்டு முறையும் அவரால் வெற்றியடைய முடியவில்லை.

விசேட இதய அறுவை சிகிச்சை நிபுணரான பெஸெஷ்கியன், தப்ரிஸ் மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் வேந்தராகவும் பணியாற்றினார், தற்போது வடக்கு ஈரானில் உள்ள இந்த மதிப்புமிக்க பல்கலைக்கழகத்தில் கல்வி ஊழியர்களின் உறுப்பினராக உள்ளார்.

அரசியல் கொள்கை

தனது நிர்வாகத்தில் அனுபவம் வாய்ந்த மற்றும் அறிவார்ந்த நபர்களிடம் பணிகளை ஒப்படைப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்திய.அவர் தனது திட்டங்களை அறிமுகப்படுத்தினார், முன்னாள் ஈரானிய வெளியுறவு மந்திரி ஜவாத் ஷரீபை நாட்டின் வெளியுறவு அமைச்சகத்தின் தலைவராக நியமிக்கும் தனது விருப்பமாக அறிவித்த அவர், அதே நேரத்தில் இஸ்லாமிய புரட்சியின் தலைவர் ஆயதுல்லா செய்யித் அலி கமேனியின் உத்தரவுகளை செயல்படுத்த உறுதிபூண்டார்.

நாட்டின் அனைத்து அரசியல் பிரிவுகளிடையேயும் ஒற்றுமை மற்றும் ஒத்திசைவின் முக்கியத்துவத்தை அவர் அடிக்கோடிட்டுக் காட்டினார், அரசியல் இணைப்புகளை விட திறமை மற்றும் அனுபவத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்.

ஈரானிய மக்களின் சாதனைகளை அடைவதற்கும், சிரமங்களை சமாளிப்பதற்கும், தடைகளைத் தாண்டுவதற்கும் தங்கள் திறனை நிரூபித்துள்ளனர் என்று பெஸெஷ்கியான் சுட்டிக்காட்டினார்.

தார்மீக தரங்களை பராமரிப்பதில் ஒரு முக்கிய காரணியாக வாக்குறுதிகளை நிலைநிறுத்துவது மற்றும் நிறைவேற்றுவதன் முக்கியத்துவத்தை பெஸெஷ்கியன் எடுத்துக்காட்டினார்.

தனிநபர்களுக்கு மரியாதை காட்டுவதன் முக்கியத்துவம், அவர்களின் குரல்கள் கேட்கப்படுவதை உறுதி செய்தல் மற்றும் நீதி மற்றும் நேர்மை கொள்கைகளின் அடிப்படையில் செயல்களுக்கு வாதிடுதல் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை அவர் வலியுறுத்தினார்.

தேசத்தை முன்னோக்கி நகர்த்துவதில் நம்பிக்கையின் முக்கிய பங்கை அடிக்கோடிட்டுக் காட்டிய அவர் மக்களிடையே நம்பிக்கையை வளர்ப்பதில் நேர்மை அவசியம் என்பதை வலியுறுத்தினார்.

வெளியுறவு கொள்கை

நாட்டின் வெளியுறவுக் கொள்கையின் வழிகாட்டும் கோட்பாடான ”கிழக்கும் இல்லை, மேற்கும் இல்லை” என்பதை அவர் மீண்டும் வலியுறுத்தினார், வெளியுறவுக் கொள்கை துறையில் தேசிய நலன்களை முன்னெடுப்பதற்கான அவரது அரசாங்கத்தின் உறுதிப்பாட்டை கோடிட்டுக் காட்டினார்.

அண்டை நாடுகளுடனான உறவுகளுக்கு முன்னுரிமை அளிப்பதன் முக்கியத்துவத்தையும், நாட்டின் வளர்ச்சியை துரிதப்படுத்துவதற்கு, உலகளாவிய தொடர்புகளை விரிவுபடுத்துவதன் முக்கியத்துவத்தையும் பெஸெஷ்கியன் அடிக்கோடிட்டுக் காட்டினார், அதே நேரத்தில் வர்த்தகம் மற்றும் ஈடுபாட்டை மேம்படுத்த வெளியுறவுக் கொள்கையினை பல்வகைப்படுத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

பல சந்தர்ப்பங்களில், இஸ்லாமிய குடியரசின் சட்ட கட்டமைப்பையும், இஸ்லாமிய புரட்சியின் தலைவர் ஆயதுல்லா செய்யத் அலி கமேனியால் வரையறுக்கப்பட்ட கொள்கைகளையும் கடைப்பிடிப்பதற்கான தனது உறுதிப்பாட்டை அவர் மீண்டும் வலியுறுத்தினார்.

இஸ்லாமிய குடியரசின் தலைவர் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதிக்கு பிரார்த்தனை செய்து வெற்றியடைய வாழ்த்துகின்ற வேளையில் அவருக்கு ஆலோசனை வழங்கியதாக ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன.

பேசேஷ்க்கியனை ஒரு புதுமை விரும்பியாகவும், மேற்குலகு சார்பானவர்போல் காட்டுவதற்கு சில சர்வதேச ஊடகங்கள் முயற்சி எடுத்தன. பலஸ்தீன் விடயத்தில் அவரது கொளகை எவ்வாறு இருக்கப்போகிறது என்ற கேள்வி பலரின் மனதிலும் இயல்பாகவே தோன்றியது. இவற்றுக்கு பதிலளிக்கும் விதத்தில் அவர் ஹமாஸின் அரசியல் பணியகத் தலைவர் இஸ்மாயில் ஹனியேவுக்கு அனுப்பிய செய்தி உள்ளது.

பலஸ்தீன் விடுதலைக்கு உதவுவது எமது இஸ்லாமிய கடமை

ஹமாஸின் அரசியல் பணியகத் தலைவர் இஸ்மாயில் ஹனியேவுக்கு எழுதிய கடிதத்தில் பெஸெஷ்கியன் புதன்கிழமை கருத்துத் தெரிவிகையில், ”இஸ்லாமியப் புரட்சியின் உயரிய கொள்கைகள் மற்றும் இலக்குகள் மற்றும் இமாம் கொமெய்னி (சுயு) அவர்களின் கொள்கைகள் மற்றும் இஸ்லாமியப் புரட்சியின் தலைவர் ஆயத்துல்லாஹ் காமனேயின் வழிகாட்டுதல்களின் கட்டமைப்பிற்குள், ஈரான் இஸ்லாமிய குடியரசு தனது பாலஸ்தீனிய நாட்டின் விடுதலைக்கு ஆதரவாக மற்றும் சியோனிச ஆட்சியின் ஆக்கிரமிப்பு மற்றும் நிறவெறிக்கு எதிரான அதன் போர், மனித மற்றும் இஸ்லாமியக் கடமையாகக் கருதுகிறது” என்று பெஸெஷ்கியன் குறிப்பிட்டார்.

”மேலும் ஈரான் ஒடுக்கப்பட்ட பாலஸ்தீனிய தேசத்தின் அனைத்து இலட்சியங்கள் மற்றும் உரிமைகள் மற்றும் புனித அல்-குத்ஸின் விடுதலையை அடையும் வரை தொடர்ந்து ஆதரவளிக்கும்” என்று அவர் அடிக்கோடிட்டுக் காட்டினார்.

பாலஸ்தீன தேசத்தின் வரலாற்று உறுதிப்பாடு மற்றும் சியோனிஸ்டுகளுக்கு எதிரான போரில் எதிர்ப்புப் போராளிகளின் வீரத் துணிச்சல் ஆகியவற்றின் நிழலில், இறுதி வெற்றி ”அன்புள்ள பாலஸ்தீன மக்களின்” கைகளில் இருக்கும் என்று அவர் வலியுறுத்தினார்.



## மனநலமும் ஆலோசனையும் 39

# மண வாழ்வில் கணவனின் எதிர்பார்ப்பு

எதிர்காலத்தில் ஏதாவது நல்லது நடக்கும் என்ற வலுவான நம்பிக்கையை எதிர்பார்ப்பு என்று அழைக்கலாம்.

திருமண உறவின் போது தம்பதிகள் ஒவ்வொருவரும் ஏதோ முக்கியமான எதிர்பார்ப்புகளுடன் வாழ்கின்றனர். அந்த எதிர்பார்ப்புகள் நிறைவேறும் சந்தர்ப்பங்களில் மனமகிழ்ச்சியும் நிம்மதியும் அடைவார்கள். அந்த எதிர்பார்ப்புகள் நிறைவேறாத போது ஏற்படும் மனநிலையை இங்கு இலகுவாக விவரிக்க முடியாது.

மணவாழ்க்கையில் கணவனின் எதிர்பார்ப்பு மனைவியின் எதிர்பார்ப்பை விட மிகவும் வித்தியாசமாக இருக்கும். அது பற்றி சுருக்கமாக நோக்குவதே இந்த கட்டுரையின் நோக்கமாகும்.

தன் மனைவி

எப்போதும் தனக்கு சிறந்த நண்பராக இருப்பதை..

அவள் தன்னுடன் மகிழ்ச்சியாக இருப்பதை..

தன்னுடன் இணைந்து புதிய விடயங்களை உருவாக்குவதை..

ஒரு குழந்தையைப் போன்று தன்னை பராமரிப்பதை...

காண அவன் ஆசைப்படுகிறேன்.

பெரும்பாலான ஆண்கள் தாம் நேசிக்கப்படுவதைவிட தங்கள் மனைவிகளால் மதிக்கப்படுவதையே விரும்புகிறார்கள் என்று ஆராய்ச்சிகள் எடுத்துக் காட்டுவதை காணலாம்.

மனைவி தன் கணவரை மதித்து, அதை உறுதிப்படுத்தி, அவரை நம்பும்போது உலகத்தையே தன் வசப்படுத்திக் கொள்ளலாம் என்று கணவர் உணர்ந்து மகிழ்ச்சி அடைவார்.

மதிக்கப்படும் கணவர் தன் ஆன்மா புத்துணர்ச்சி அடைவதை கண்டு ஆறுதல் அடைவார். இது அவரது முக்கியமான எதிர்பார்ப்புகளில் முதன்மையானதாகும்.

தன் மனைவி வீட்டிலும் குழந்தைகளோடும் தன் பங்கை சமமாகச் செய்ய வேண்டும் என்றும்

தன் வீட்டை அமைதி நிறைந்த வீடாகவும் வரவேற்பும் வாழ்த்துக்களும் கிடைக்கும் வீடாகவும் உருவாக்கி வைக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்.

அவர் மிகவும் விரும்புவது அமைதி உள்ள வீட்டையே. வீடு ஒரு புகலிடமாக இருக்க வேண்டும் என்று அவர் ஆசைப்படுகிறார்,

வீட்டின் "வெற்றியை" தீர்மானிக்கும் சக்தி தன் மனைவியிடம் இருக்கிறது என்று அதிகமான கணவர்மார் நினைக்கிறார்கள்.

எனவே வீட்டை மனநிறைவு கிடைக்கும் இடமாக, அன்பும் மகிழ்ச்சியும் மரியாதையும் கொண்ட இடமாக, மனிதர்கள் வாழும் இடமாக மாற்ற மனைவியின் பங்களிப்பு அடிப்படையானது என்று அவர் நம்புகிறார்.

பொருளாதார நெருக்கடியின்போதும் எதிர்பாராத சூழ்நிலைகளுக்கு முகம் கொடுக்கும் போதும் மனைவி பொறுமையாகவும் பொறுப்புணர்வுடனும் இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார். இதுபோன்ற சந்தர்ப்பங்களில் மனைவி தனக்கு ஆறுதல் தரவேண்டும் என்று எதிர்பார்க்கிறார்.

அடக்கம், ஒழுக்கம், கொண்டதாக தனது மனைவியின் மொழி வெளிவர வேண்டும் என்று விரும்புகிறார். சப்தமிட்டு பேசுவதையோ, எடுத்தெறிந்து விழுவதையோ அவர் கனவில் கூட எதிர்பார்ப்பதில்லை. சிரித்த முகத்துடன் காட்சி தர வேண்டும் என்பது அவரது உள்ளார்ந்த ஆசையாகும்.

எல்லாவற்றிற்கும் மேலாக, நீங்கள் அவரை நேசிக்கிறீர்கள் என்பதையும், நீங்கள் அவரை நம்புகிறீர்கள் என்பதையும், எந்த விடயத்திலும் நீங்கள் அவருடன் உறுதியாக இருக்கிறீர்கள் என்பதையும் அவரை கணவன் என்ற கௌரவத்தோடு மதித்து மரியாதையோடு நடந்து கொள்ள வேண்டும் என்பதை ஆசையோடு எதிர்பார்க்கிறார். திருமணத்தின் வலிமையை தீர்மானிப்பதில் இந்த விடயங்கள் முக்கிய இடம் வகிக்கின்றன.

இந்த எதிர்பார்ப்புகள் எல்லாம் அழகானவை. அவை நிறைவேறும் போது கணவனை கணவர் தைரியமடைவார்.

தன் எதிர்பார்ப்புகளை கணவன் வாய் திறந்து சொன்னாலும் சொல்லாவிட்டாலும் அவற்றை அறிந்து நிறைவேற்ற வேண்டும் என்ற ஆசை, ஆர்வம் எந்த மனைவியிடம் இருக்குமோ அவள் தன் கணவனை ஆரோக்கியமடையச் செய்வது போன்று தனது வீட்டையும் குடும்பத்தையும் சந்ததிகளையும் பயனும் பெறுமதியும் நிறைந்த தல்ல மனிதர்களாக ஆகிவிடுவாள்.

கணவனின் நல்ல எதிர்பார்ப்புகளை இனங்கண்டு அவற்றில் முக்கியமானவற்றை முதன்மைப்படுத்தி நிறைவேற்ற முன்வந்தால் அழகான ஆரோக்கியமான திருமண உறவை உருவாக்கிய உத்தமியாகவும் நீங்கள் ஆகலாம்.



**அஸ்ஹர் அன்ஸார்** FRSPH (UK)
**மனோதத்துவ ஆலோசனை நிபுணர்**
**மனோதத்துவ எழுத்தாளர்**










புரவலர் புத்தகப் பூங்காவின் ஸ்தாபகர் புரவலர் ஹாசிம் உமரின் "கல்விக்கு கரம் கொடுப்போம்" நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ இரண்டாவது கட்டமாக மேலும் ஐந்து மாணவர்களுக்கு மடிக்கணினி அன்பளிப்பாக வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் புரவலர் பூங்கா ஸ்தாபகர் ஹாஸிம் உமர், ஐக்கிய மக்கள் சக்தியின் உபதலைவி உமாச்சந்திரா பிரகாஷ் ,தினகரன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் செந்தில் வேலவர் உட்பட மடிக்கணனியை பெற்றுக் கொண்ட மாணவர்களும் கலந்து கொண்டனர். **(அஸ்ஹர் இப்றாஹிம்)**

## மங்கையொளி

**பயாஸா பாஸில்**

# தொலைந்து போன அந்த நாட்கள்...



தொலைந்து போன அந்த
நாட்களை ஞாபக படுத்த
வேண்டாம் - சிரிப்பு மட்டுமே
சிறகடிக்க
சிந்தனைகள் வண்ணமடிக்க
ஒரு தாய் சேய் போல
ஓடிய அந்த தருணங்கள்தாம்
நியாபகத்தில் மிகவும் வலிக்கும்
நாட்கள்.
மீண்டும் ஒரு நாள் வந்திடாதோ -
மீன் என்று பேத்தை பிடித்து
பாண் என்று இலையை வெட்டி
தேன் கொஞ்சம்
செம்பருத்தியில் திருடி
சந்தோசமாய் கழிந்த அந்த
பொழுதுகள்?
90ஸ" கிட்ஸ் மட்டுமே
கொண்டாடிய ஒரு வசந்த காலம்
அது. நோண்டிக்கொண்டிருக்க
ஃபோன் இல்லை நொண்டி
விளையாடவே காலம்
போதவில்லை.
கள்ளு குத்தி என்று குடித்தோடிய
அந்த தருணம் கனவில் வந்தாலும்
போதும் களித்திருப்போம்
மனதார.

பொய் சொன்னால்
வாயில் புழு வரும்
என்றும் விதை
உண்டால் வாயில்
மரம் முளைக்கும்
என்றும் இன்றைய
கிட்ஸ் இடம்
சொன்னால்
நம்மை துரத்தி
அடிப்பார்கள்.
கண்களை
விரித்து நம்பினோம்
கவலையின்றி
வாழ்ந்தோம்.
குடுயுஆநுளு போட்டு
வாழ்கையை கணித்து மகிழ்ந்த
அந்த நொடிகள், ஞுழுளு இல்
தோற்ற அந்த வலிகள்.... ஆண்,
பெண், பொருள், இடம் காலம்
விளையாடிய அந்த வயது...
பாட்டுக்கு மெட்டெழுதி பாடிய
சுற்றுலாக்கள்....
பாதிலேயே தூங்கிய
கார்ணிவேல்...
அப்பப்பா எத்தனை
மகிழ்ச்சிகள்....
கூட்டாஞ்சோறு செய்து அதில்
பங்கு பிரித்த நம் விரல்கள் ...
புளியம் விதையை சேர்த்து வைத்த
நம் வங்கிகள்
மஞ்சானி தேடி தோட்டத்தில்
சுற்றிய நம் கால்கள்
பத்து ரூபாய் போதும் பரவசமாய்
வாழ்ந்து வந்தோம், பத்தாயிரம்
தந்தாலும் வாங்கிட முடியுமா
அந்த நொடிகள்...
டப்பா டப்பா மாஸ்டர்
எப்பெப்ப கல்யாணம்... மாதம்
பிறக்கட்டும் மல்லிகை பூ
பூக்கட்டும்..
நாம் இயற்றிய பாடல்களும்
பேப்பரில் கதை வரைந்து
சொல்லிய நம் ஆற்றலும் சினி
நடிகர்களுக்காய் சண்டையிட்ட
அந்நாட்களும்...
நினைக்கயிலே கன்னம்
புன்னகைக்கிறது..
மருதானியில் நாம் கண்ட அந்த
வாசனையும் மடி மீது தூங்கி கதை
கேட்ட அந்த பொழுதுகளும்
ஜம்போலக்காயில் உப்பு
போட்டு சுவைத்த அந்த இனிப்பும்
இனி கோடி கொடுத்தாலும்
கிடைக்காது...... இனி நாடி வரவும்
மாட்டாது.....

**மாஹிரா ஸிராஜ்**



# புகையிரத சிவில் பொறியியலாளர்கள் இந்தியா விஜயம்

(அஷ்ரப் ஏ சமத்)

ஸ்ரீலங்கா புகையிரத திணைக்களத்தின் புகையிரத சிவில் பொறியிலாளர் எம்.சி நிசார் தலைமையிலான பொறியியலாளர்கள் குழு கடந்த வாரம் பயிற்சிக்காக இந்திய புகையிரத சிவில் பொறியியல் நிறுவனத்திற்கு சென்று பயிற்சிகளைப் பெற்றிருந்தனர்.

புகையிரத ஓடு பாதை மற்றும் சிவில் சம்பந்தமான மகோ- ஓமந்தை இந்திய புகையிரதத் திட்டத்திற்காகவே இப் பொறியிலாளர்கள் பயிற்சிக்காக சென்று நவீன தொழில்நுட்ப பயிற்சிகளை பெற்றதாக புகையிரத சிவில் பொறியிலாளர் எம்.சி.நிசார் தெரிவித்தார்.

சாய்ந்தமருதைச் சேந்தவரும் கல்முனை சாஹிராக் கல்லூரியின் பழைய மாணவருமான இவர் கடந்த இரண்டரை தசாப்தங்களாக புகையிரத சிவில் பொறியியல் துறையில் சேவையாற்றிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# நிந்தவூர் இஸ்மாயிலுக்கு விருது வழங்கி கௌரவம்



தமிழ் லெட்டர் நிறுவனத்தினால் அண்மையில் நடாத்தப்பட்ட நிகழ்வில் நிந்தவூரைச் சேர்ந்த ஏ.எல்.எம். இஸ்மாயில் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

இலங்கை துறைமுக அதிகார சபையில் சிரேஷ்ட பாதுகாப்பு அலுவலகராக கடமையாற்றி பணியாற்றி ஓய்வுபெற்ற இவர், அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முண்ணணியின் கிளைத் தலைவரும், நிந்தவூர் ஒன்றிய சம்மேளன செயலாளரும், அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முண்ணணியின் கிழக்கு மாகாண பணிப்பாளர், அம்பாறை மாவட்ட உதைப்பந்தாட்ட சம்மேளன பொருளாளர், இலங்கை துறைமுக அதிகார சபையின் முஸ்லிம் மஜ்லிஸின் பொருளாளர், லொண்றஸ் விளையாட்டுக் கழகத்தின் உப தலைவர், பொருளாளர், விளையாட்டு வீரர், கென்ட் விளையாட்டுக் கழகத்தின் உதைப்பந்தாட்ட முகாமையாளர், அணித்தலைவர் மற்றும் ஆலோசகர், ஜும்மா பள்ளிவாசல் விசாரணைக்குழுவின் இளைஞர் பிரதிநிதி என பல பதவிகளை வகித்து சமூகத்துக்கு பணியாற்றியமையும் பாராட்டத்தக்கது.

மேலும், இவர் தற்பொழுது அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முண்ணணியின் உயர்பீட உறுப்பினர் மற்றும் நிர்வாக குழு உறுப்பினர், அம்பாறை மாவட்ட முஸ்லிம் லீக் வாலிப முண்ணணியின் முதல் உபதலைவர், முஸ்லிம் லீக் வாலிப முண்ணணியின் நிந்தவூர் பிரதேச தலைவர் உட்பட பல பதவிகளில் பல நிறுவனங்களில் அங்கம் வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# தே.நீ.வ. வடிகாலாமைப்பு சபையின் உள்ளக செயற்பாடுகளை டிஜிட்டல் மயமாக்கும் நடவடிக்கை ஆரம்பித்து வைப்பு



(அஷ்ரப் ஏ சமத்)

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலாமைப்பு சபையின் உள்ளக செயற்பாடுகளை டிஜிட்டல் மயமாக்கும் நடவடிக்கை ஆரம்பித்து வைக்கப்பட்டது. மேற்படி வைபவம் பத்தரமுல்லையில் உள்ள நீர்வழங்கல் அமைச்சில் நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையில் அண்மையில் (09) இடம்பெற்றது.

ஜயிக்கா மற்றும் கிளைமக்ஸ் நிறுவனத்துடன் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை 2023 ஒக்டோபர் மாதத்தில் முத்தரப்பு உடன்படிக்கை ஒன்றில் டிஜிட்டல் செயற்பாட்டு மற்றும் உள்ளக செயற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக கைச்சாத்திருந்தது.

ஆறு மாதகாலத்திற்குள் உரிய கணினி வலையமைப்பினை தயாரித்து நாடளாவிய ரீதியில் பரந்து விரிந்துள்ள வடிகாலமைப்பு சபையின் சேவை நிலையங்களிலுள்ள 2000 ற்கு அதிகமான ஊழியர்கள் உரிய பயிற்சியின் ஊடாக வலையமைப்பினை இயக்கும் நிலைமைக்கு வந்துள்ளமை இத்திட்டத்தின் சிறப்பம்சமாகும்.

இந் நிகழ்வில் அமைச்சின் செயலாளர் ஏ.சி.எம். நபீல், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் தலைவர் நிஷாந்த ரணதுங்க மற்றும் ஜெயிக்கா நிறுவனத்தின் பிரதான பிரதிநிதி யமதா டெஸ்டிதுயா கிளைமக்ஸ் இன்டநெசனல் பிறைவட் லிமிட்டெட்டின் பிரநிதிகளும் நீர் வழங்கள் வடிகாலமைப்புச் சபையின் பொதுமுகாமையாளர் ரீ. பாரதிதாசன் உட்பட பல அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

# பேருவளையில் துவங்கும் சஹ்மி சஹீதின் சாதனைப்பயணம்!

(முக்தார்)



பேருவளையில் இருந்து இலங்கையின் கரையோரமாக நடந்தே சுற்றிவந்து சாதனை படைக்கும் நோக்குடன், பேருவளையைச் சேர்ந்த யூடியூபர் சஹ்மி ஷஹீத்,நேற்று (13) தனது சாதனைப் பயணத்தை துவங்கினார். இவர், கடந்த 2021 ஆம் ஆண்டில் முதல் முயற்சியாக பேருவளையிலிருந்து தெற்காக காலி வரை (50km) நடந்து சென்றதோடு, மிகக் குறைந்த செலவில் நாட்டின் 25 மாவட்டங்களுக்கும் 14 நாட்களில் சென்று வந்தமையும் குறிப்பிடத்தக்கது.

மேலும் இவர் , சிவனொளி பாத மலைக்கு நடந்து சென்றமை, பேருவளையிலிருந்து கொழும்புவரை 12 மணி நேரத்தில் நடந்து சென்றமை என பலகட்ட சாதனைகளை பதிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நிந்தவூரில் உள சமூக பிரச்சினைகள் தொடர்பில் இளைஞர்களை வலுவூட்டும் நிகழ்வு



(அஸ்ஹர் இப்றாஹிம்)

உள சமூக பிரச்சனைகள் தொடர்பில் இளைஞர்களை விழிப்புணர்வூட்டும் செயலமர்வு நிந்தவூர் பிரதேச செயலகத்தின் கேட்போர் கூடத்தில் அண்மையில் இடம் பெற்றது.

பிரதேச செயலகத்தின் நிர்வாக உத்தியோகத்தர் எம்.ரீ.சரீப் தலைமையில் இடம் பெற்ற மேற்படி நிகழ்வில் உளவளத்துணை உத்தியோகத்தர் ரீ.எம். எம்.ஹப்ரத், பிரதான வளவாளராக அம்பாறை மாவட்ட உளவளத்துணை இணைப்பாளர் மனுஸ் அபூபக்கர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# 35 வருட சேவையிலிருந்து அதிபர் ராஜி ஐனுல் ஹக் ஓய்வு

(ஐ. ஏ. காதிர் கான்)



வட மத்திய மாகாண அநுராதபுரம் மாவட்டத்தில் அமைந்துள்ள அநுஃநேகம முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் அதிபர் எச். ராஜி ஐனுல் ஹக், தனது 60 ஆவது வயதில் அதிபர் பணியிலிருந்து ஓய்வு அண்மையில் (05) பெற்றார்.

இதே பாடசாலையில் 1989.09.01 ஆம் திகதியன்று முதலாவது ஆசிரியர் நியமனத்தைப் பெற்றதன் பின், மேலும் பல பாடசாலைகளில் ஆசிரியராகவும் இவர் பணியாற்றினார். அதனைத் தொடர்ந்து, 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2024ஆம் ஆண்டு வரை, அநு / நேகம முஸ்லிம் வித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றி பல சேவைகளைச் செய்திருந்தார்.

35 ஆண்டுகளைக் கல்விக்காக அர்ப்பணித்து, பலரது உள்ளங்களில் இடம் பிடித்த இவர் அகில இலங்கை சமாதான நீதவானாகவும், கல்நேவ பொலிஸ் ஆலோசனை சபை உறுப்பினராகவும், கல்நேவ மத்தியஸ்த சபை உறுப்பினராகவும், சமூக சேவை டிப்ளோமாதாரியாகவும் விளங்குகின்றார்.

பல்வகை ஆளுமை கொண்ட ஓய்வுபெற்ற அதிபர் ராஜி ஐனுல் ஹக், நேகமயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட, நேகமயிற்கு பெருமை சேர்த்துத்தந்து மற்றும் கல்விப் பணிப்பாளராகத் திகழ்ந்து பல சேவைகளையும் புரிந்த மர்ஹூம் பீ. ஹபீப் - மர்ஹூமா ஜே.எல். ராஹிலா உம்மா தம்பதிகளின் புதல்வருமாவார் என்பது குறிப்பிடத்தக்கது.

உதயம்
தேசிய பத்திரிகையாக (மின்னிதழ்) வலம்வருகின்ற **"உதயம்"** பத்திரிகைக்கு வாசகர்களின் பேராதரவை எதிர்பார்ப்பதுடன் கீழுள்ள QR ஐ Scan செய்வதனூடாக எமது வட்ஸ்அப் குழுமத்தில் இணைந்து ஒவ்வொரு வெளியீட்டின் பிரதிகளையும் இலவசமாக பார்வையிடுங்கள்...

# விம்பிள்டன் டென்னிஸ் தொடர்; இறுதியில் மோதும் ஜெக்கோவிச், அல்கராஸ்



அரபாத் பஹுர்தீன்



விம்பிள்டன் சம்பியன்ஷிப் டென்னிஸ் தொடரின் தீர்மானமிக்க இறுதிப் போட்டியில் முன்னால் சம்பியனான சேர்பியாவின் நவோக் ஜெக்கோவிச் மற்றும் ஸ்பெய்னின் கார்லேஸ் அல்கராஸ் ஆகியோர் இன்று பலப்பரீட்சை நடாத்துகின்றனர்.

உலகின் புகழ் பெற்ற டென்னிஸ் தொடரான விம்பிள்டன் டென்னிஸ் தொடர் இங்கிலாந்தில் இடம்பெற்று வருகின்றது. இத் தொடர் கடந்த ஜ/ன் மாதம் 24ஆம் திகதி ஆரம்பித்து இன்று வரை இடம்பெறவுள்ளது. இதில் ஆடவர் ஒற்றையர் , இரட்டையர், மகளிர் ஒற்றையர் , இரட்டையர் மற்றும் களப்பு இரட்டையர் என 5 பிரிவுகளாக இடம்பெற்று வருகின்றன. அதற்கமைய ஆடவர் ஒற்றையர் பிரிவில் முன்னனி வீரர்கள் பலர் பங்கேற்றிருந்தனர்.

அதற்கமைய முதல் அரையிறுதி ஆட்டத்தில் இத்தாலியின் லெரன் முசட்டியை எதிர்த்தாடினார் செர்பியாவின் நவோக் ஜெக்கோவிச். இப்போட்டியில் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய ஜெக்கோவிச் முதல் செட்டை 6:4 என வெற்றி கொண்டார். பின்னர் இடம்பெற்ற 2ஆவது செட்டை 7:6 என போராடி வென்ற ஜெக்கோவிச் தீர்மானமிக்க 3ஆவது செட்டை 6:4 என கைப்பற்ற 3:0 என்ற நேர் செட்களில் வெற்றி பெற்ற நவோக் ஜெக்கோவிச் இறுதிக்குள் நுழைந்தார்.

அடுத்து இடம்பெற்ற 2ஆவது அரையிறுதிப் போட்டியில் டேனியல் மெத்வடேவை எதிர்த்தாடினார் ஸ்பெய்னின் கார்லோஸ் அல்கராஸ். இப் போட்டியின் முதல் செட்டை 6:7 என இழந்தார் அல்கராஸ். இருப்பினும் 2ஆவது செட்டில் மீட்ச்சி கண்ட அல்கராஸ் 6:3 என வெற்றி கொண்டு சமப்படுத்தினார். பின்னர் இடம்பெற்ற 3ஆது மற்றும் 4ஆவது செட்டை 6:4 , 6:4 என கைப்பற்றிய அல்கராஸ் 3:1 என வெற்றி கொண்டு விம்பிள்டன் தொடரின் இறுதிப் போட்டிக்குள் கால்பதித்தார்.

அதற்கமைய இன்று இடம்பெறவுள்ள தீர்மானமிக்க இறுதிப் போட்டியில் முன்னாள் விம்பிள்டன் சம்பியனான சேர்பியாவின் நவோக் ஜெக்கோவிச் இளம் வீரரான ஸ்பெய்னின் கார்லேஸ் அல்கராஸை எதிர்த்து விளையாடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பாரிஸ் ஒலிம்பிக் போட்டிகள்; இலங்கைக்காக பதக்கம் வெல்லும் கனவுடன் 6 வீர,வீராங்கனைகள்



பிரான்ஸின் பாரிஸ் நகரில் இம்மாதம் 26ஆம் திகதி ஆரம்பிக்க இருக்கும் ஒலிம்பிக் தொடரில் பங்கேற்க இலங்கையிலிருந்து 6 வீர, வீராங்கனைகள் பாரிஸ் பயணமாகவுள்ளனர்.

உலகம் எதிர்பார்த்துக் காத்திருக்கும் ஒலிம்பிக் விளையாட்டு போட்டி நிகழ்வுகள் இவ்வாண்டு 26ஆம் திகதி முதல் அடுத்த மாதம் 11ஆம் திகதி வரை பிரான்ஸின் பாரிஸ் நகரில் இடம்பெறவுள்ளது. உலக நாடுகள் பலவற்றிலும் இருந்து ஆயிரக்கனக்கான வீர, வீராங்கனைகள் பங்கேற்கவுள்ளனர். ஒரு விளையாட்டுத் திருவிழாவாக இந்நிகழ்வு நோக்கப்படுகின்றது.

அந்தவகையில் இம்மாதம் 26ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஒலிம்பிக் போட்டிக்கு இலங்கையைப் பிரதிநிதித்துவம் செய்து 6 வீர, வீராங்கனைகள் பங்கேற்கின்றனர். அதற்கமைய ஆடவர் ஒற்றையர் பெட்மிண்டன் போட்டியில் பங்கேற்க விரேன் நெட்டேசிங் இலங்கையைப் பிரதிநிதித்தும் செய்கிறார். மேலும் பெண்களுக்காக 100 மீட்டர் பெக்ஸ்டோர்க் நீச்சல் போட்டியில் கங்கா செனவிரத்ன களம் காண்கிறார்.

மேலும் ஆண்களுக்கான 100 மீட்டர் ப்ரீஸ்டைல் நீச்சல் போட்டியில் கைல் அபேசிங்க இலங்கையைப் பிரதிநிதித்துவம் செய்கிறார். அவருடன் பெண்களுக்கான 800 மீட்டர் ஓட்டப் போட்டியில் தருஸ ீ கருணாரத்னவும், ஆண்களுக்காக 400 மீட்டர் ஓட்டப் போட்டியில் அருண தர்சனவும் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர். மேலும் பெண்களுக்கான ஈட்டி எறிதல் போட்டியில் நதீஷா லெக்கம்கே களம் காண்கிறார்.

இவ் வீரர்கள் எம் இலங்கை திரு நாட்டிற்காக பதக்கங்களை வெற்றி கொள்ள வேண்டும் என "உதயம்" இலங்கை ரசிகர்கள் சார்பான வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றது.

# யூரோவில் ஸ்பெய்ன், இங்கிலாந்து கோபாவில் ஆர்ஜென்டீனா, கொலம்பியா இறுதியில் பலப்பரீட்சை




உலகிண்ண புகழ் பெற்ற இரு உதைப்பந்தாட்ட தொடர்களான யூரோ கிண்ணம் மற்றும் கோபா அமெரிக்க கிண்ணம் ஆகியவன்றின் இறுதிப் போட்டிகள் நாளை அதிகாலை இடம்பெறவுள்ளது. இதில் யூரோ கிண்ணத்தின் இறுதி ஆட்டத்தில் ஸ்பெய்ன் மற்றும் இங்கிலாந்து அணிகளும், கோபா அமெரிக்க கிண்ணத்தின் இறுதி ஆட்டத்தில் ஆர்ஜன்டீனா மற்றும் கொலம்பியா அணிகளும் பலப்பரீட்சை நடாத்தவுள்ளன.

யூரோ கிண்ணத் தொடர்

1960ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இத் தொடர் 4 ஆண்டுகளுக்கு ஒரு முறை இடம்பெற்றுருகின்றது. இதில் ஐரோப்பாக் கண்டத்தினைப் பிரதிநிதித்துவம் செய்யும் நாடுகள் பங்கேற்று வருகின்றன. அந்தவவகைளில் நடப்பாண்டின் யூரோ கிண்ணத் தொடர் ஜேர்மனியில் இடம்பெற்று வருகின்றது. இம்முறை இத் தொடரில் 24 அணிகள் பங்கேற்றிருக்க முதல் சுற்று லீக் ஆட்டத்திற்காக ஒரு குழுவில் 4 அணிகள் வீதம் 6 குழுக்கள் பிரிக்கப்பட்டிருந்தன.

அதிலிருந்து 2ஆவது விலகல் சுற்றுக்கு 16 அணிகள் தகுதி பெற்றிருந்தன. பின்னர் 3ஆவது சுற்றான காலிறுதிப் போட்டிக்கு 8 அணிகள் தெரிவாகியிருந்தது. அதில் முதல் காலிறுதி ஆட்டத்தில் சுவிட்சர்லாந்து அணியை வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறியது இங்கிலாந்து அணி. 2ஆது காலிறுதி ஆட்டத்தில் துருக்கியை வெற்றிகொண்டு அரையிறுதியை உறுதி செய்தது நெதர்லாந்து. பின்னர் இடம்பெற்ற 3ஆவது காலிறுதி ஆட்டத்தில் ஜெர்மனியை வீழ்த்திய ஸ்பெய்ன் அணி அரையிறுதியில் கால்பதித்தது. அடுத்து இடம்பெற்ற 4ஆவதும் இறுதியுமான காலிறுதி ஆட்டத்தில் போர்த்துக்கல் அணியை வெற்றி கொண்ட பிரான்ஸ் அரையிறுதிக்குள் நுழைந்தது.

பின்னர் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற முதல் அரையிறுதிப் போட்டியில் ஸ்பெய்ன் அணி , பிரான்ஸ் அணியை எதிர்த்தாடியது. இப் போட்டியின் முதல் பாதி ஆட்டத்தின் ஆரம்ப நிமிடமான 9ஆவது நிமிடத்தில் கோலோ முவானியின் கோலினால் 1:0 என முன்னிலை பெற்றது. பின்னர் போட்டியின் 21ஆது நிமிடத்தில் லமினோ யமலின் பதில் கோலுடன் போட்டியை 1:1 என சமன் செய்தது ஸ்பெய்ன் அணி. பின்னர் 25ஆவது நிமிடத்தில் டேனி ஓல்மோவின் கோலின் உதவியுடன் முதல் பாதியை 2:1 என முன்னிலை பெற்றது ஸ்பெய்ன். பின்னர் தொடர்ந்த 2ஆவது பாதியில் இரு அணிகளும் கோல்களை உட்செலுத்தாமல் போக முழு நேர ஆட்டம் முடிவில் 2:1 என வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது ஸ்பெய்ன் அணி.

அதன் பின்னர் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற 2ஆது அரையிறுதி போட்டியில் இங்கிலாந்து அணி சம பலமிக்க நெதர்லாந்து அணியை எதிர்தாடியது. இப்போட்டியின் முதல் பாதி ஆட்டத்தின் 7ஆவது நிமிடத்தில் சி ஸிமோன்ஸ் கோலினை உள்ளனுப்பி நெதர்லாந்தை முன்னிலைப் படுத்தினார். பின்னர் 9ஆது நிமிடத்தில் இங்கிலாந்து அணிக்கு பெனால்ட்டி வாய்ப்பு கிடைக்க அதனை ஹரிக்கேன் கோலாக மாற்ற போட்டி 1:1 என சமநிலை பெற்றது. பின்னர் 2ஆவது பாதியில் இறுதி நிமிடமான 90ஆவது நிமிடத்தில் வாட்கின்ஸ் வெற்றி கோலை உள்ளனுப்ப 2:1 என வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி நாளைய தினம் இடம்பெறவுள்ள இறுதிப்போட்டியில் ஸ்பெய்ன் அணியை எதிர்த்தாடள்ளது.

கோபா அமெரிக்க கிண்ணம்

தென் அமெரிக்கக் கண்டத்திலுள்ள நாடுகளுக்கிடையிலான உதைப்பந்தாட்டப் போட்டித் தொடரான கோபா அமெரிக்க கிண்ணம் 1916ஆம் ஆண்டு முதல் இடம்பெற்று வருகின்றது. அந்தவகையில் நடப்பாண்டின் தொடர் அமெரிக்காவில் இடம்பெற்று வருகின்றது. இதில் முதல் லீக் சுற்று ஆட்டத்தில் ஒரு குழுவில் 4 அணிகள் வீதம் 4 குழுக்கல் பிரிக்கப்பட்டிருந்தன. இதில் அடுத்த சுற்றான காலிறுதி போட்டிக்கு 8 அணிகள் தெரிவாகியிருந்தன. அதில் முதல் காலிறுதி ஆட்டத்தில் ஈக்வடோர் அணியை பெனால்ட்டி உதையில் வீழ்த்திய ஆர்ஜென்டீனா அரையிறுதிக்குள் நுழைந்தது. 2ஆது காலிறுதிப் போட்டியில் கனடா அணி வெனிசுவலாவை வெற்றி கொண்டு அரையிறுதியை உறுதிப் படுத்தியது. 3ஆவது காலிறுதி ஆட்டத்தில் பனாமாவை பந்தாடிய கொலம்பிய அணி அரையிறுதிக்குள் செல்ல 4ஆது காலிறுதி போட்டியில் உருகுவே அணி பலமிக்க பிரேஸிலை வெளற்றி கொண்டு அரையிறுதியை உறுதி செய்தது.

இந்நிலையில் கடந்த புதன் இடம்பெற்ற முதல் அரையிறுதிப் போட்டியில் உலகச் சம்பியனான ஆர்ஜென்டீனா அணி கனடா அணியை எதிர்கொண்டது. இப் போட்டியில் 22ஆவது நிமிடத்தில் அல்வாரெசும், 51ஆவது நிமிடத்தில் லயனல் மெஸ்ஸ ியும் கோலினை உட்செலுத்திக் கொடுக்க 2:0 என இலகு வெற்றியைப் பதிவு செய்த ஆர்ஜென்டீனா இறுதிப் போட்டிக்குத் தெரிவானது.

பின்னர் இடம்பெற்ற 2ஆவது அரையிறுதிப் போட்டியில் கொலம்பியா அணி பலமிக்க உருகுவே அணியை எதிர்த்தாடியது. இப்போட்டியின் 39ஆவது நிமிடத்தில் லெர்மா அடித்துக் கொடுத்த கோலினால் 1:0 என உருகுவே அணியைீழ்த்தி இறுதிப் போட்டிக்குள் நுழைந்தது கொலம்பியா அணி. அதற்கமைய நாளைய தினம் உலகச் சம்பியனான ஆர்ஜென்டீனா அணியை ஹாட்ரொக் அரங்கில் எதிர்த்தாடவுளளது கொலம்பியா அணி என்பது குறிப்பிடத்தக்கது.

# மே.இ. தீவுகளுக்கு எதிரான இன்னிங்ஸ் வெற்றியுடன் அண்டர்ஸனிற்கு பிரியாவிடை கொடுத்தது இங்கிலாந்து



மேற்கிந்தியத் தீவுகள் அணியுடனான 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் போட்டியில் அறிமுக வீரரான குஸ் அட்கின்ஸனின் மிரட்டல் பந்துவீச்சில் மேற்கிந்தியத் தீவுகள் அணி சுருண்டு போக இன்னிங்ஸ் மட்டும் 114 ஓட்டங்களால் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி வேகப்பந்துவீச்சாளரான ஜேம்ஸ் அண்டர்ஸனுக்கு வெற்றியுடன் பிரியாவிடை கொடுத்தது.

சுற்றுலா மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கும் இங்கிலாந்து அணிக்கும் இடையிலான 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் போட்டி கடந்த 10ஆம் திகதி லோட்ஸில் ஆரம்பித்திருந்தது. இப் போட்டி இங்கிலாந்து அணியின் வலது கை வேகப்பந்துவீச்சாளரான ஜேம்ஸ் அண்டர்ஸனின் இறுதி சர்வதேச போட்டி என்பதனால் மைதானத்தில் ரசிகர்கள் குழுமியிருக்க இரு அணிகளின் வீரர்கள் மைதானத்தினுல் அணிவகுத்திருக்க அண்டர்ஸன் கை அசைத்தவாறு மைதானத்துக்குள் இறங்கினார்.

இப் போட்டியின் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி முதலில் களத்தடுப்பை தேர்வு செய்திருந்தது. இதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடக் களம் நுழைந்த மேற்கிந்தியத் தீவுகள் அணி 121 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. துடுப்பாட்டத்தில் மிக்லி லோயிஸ் 27 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றுக் கொண்டார். பந்துவீச்சில் அறிமுகப் போட்டியில் விளையாடிய குஸ் அட்கின்ஸன் 7 விக்கெட்டுக்களை அள்ளிச் சுருட்டியிருக்க இறுதி சர்வதேச போட்டியில் விளையாடும் அண்டர்ஸன் 1விக்கெட்டை வீழ்த்தினார்.

பின்னர் தமது முதல் இன்னிங்ஸை தொடங்கிய இங்கிலாந்து அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 371 ஓட்டங்களைப் பெற்றது, துடுப்பாட்டத்தில் க்ரவ்லே 76, ஜமி ஸ்மித் 70, ஜோ ரூட் 68, ஒலிவ் போப் 57 மற்றும் ஹென்றி ப்ரூக் 50 ஓட்டங்களைப் பெற்று அணிக்கு வலுச்சேர்த்தனர். பந்துவீச்சில் சீலர் 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பின்னர் 250 ஓட்டங்கள் முதல் இன்னிங்ஸ் பின்னிலையுடன் தமது 2ஆவது இன்னிங்ஸை விளையாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 138 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுக்களையும் இழந்து இன்னிங்ஸ் மற்றும் 114 ஓட்டங்களால் தோல்வியை சந்தித்தது. துடுப்பாட்டத்தில் குடாகஸ் மெட்டோ ஆட்டமிழக்காமல் 31 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவவீச்சில் குஸ் அட்கின்ஸன் 5 விக்கெட்டுக்களையும் , ஜேம்ஸ் அண்டர்ஸன் 3 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இப் பத்திரிகையானது (மின்னிதழ்) Moon Media Network நிறுவனத்தினால் 41/2, விஜித வீதி, நதிமால, தெஹிவளை எனும் முகவரியில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.